காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 11, திங்கட்கிழமை 26.12.2016 கதிர் 51

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading.
WELLA Hair Dressing
Ladies & Gents
வெலா சலூன்
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# சமஷ்டியை விடுவதற்கு சம்பந்தன் சம்மதமாம்!

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 27

**அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பான கோரிக்கையையும் முன்வைக்கப் போவதில்லை எனத் தம்மிடம் உறுதியளித்துள்ளார் என அரசின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.**

இவ்வாறான தமிழ்த் தலைவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது நாட்டு மக்கள் செய்த பாக்கியம் என இரா.சம்பந்தனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர. சம்பந்தன் போன்ற சிறந்த அரசியல் தலைவர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் காலத்திலேயே நாட்டின் தேசியப்

பக்கம் 20 >>>

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு!

வெயாங்கொட ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் கொல்லப்பட்டார்.

நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய உதம்மிட சமரே என்பவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

## ஆசிரியர் இடமாற்றம் ஜனவரியில்!

உரிய சேவைக்காலத்தை நிறைவுசெய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் உரிய முறைப்படி ஜனவரியில் இடம்பெறும் என வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பாடசாலைகளில் நிபந்தனையின் அடிப்படையில் 6 ஆண்டுகால சேவையை நிறைவு செய்தவர்களுக்கான வலய ரீதியான இடமாற்றமும், ஒரே பாடசாலைகளில் 7 ஆண்டுகள் சேவைபுரிந்தவர்களுக்கான உள்ளக இடமாற்றமும் ஆசிரியர்களின் கோரிக்கைக்கு அமைய ஜனவரி மாதம் வழங்கப்படும்.

வன்னியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பதிலீடாக ஆசிரியர்கள் அனுப்பிவைக்கப்பட்ட பின்பு, அவர்களுக்கான இடமாற்றத்தை வழங்குமாறும் அதுவரையில் இடமாற்றத்தை ஒத்திவைக்குமாறும் சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

## அளப்பு அருணாசலம்



மறிக்கிறவயளுக்கு முதலில ஒரு மனநோய் ஆஸ்பத்திரி கட்ட வேணும் பாருங்கோ...!

## புசல்லாவையில் 5 வீடுகள் எரிந்தன

புசல்லாவை கலஹா தெல் தோட்டைப்பகுதியிலுள்ள லயன் குடியிருப்பு ஒன்றில் நேற்று நண்பகல் ஏற்பட்ட தீ விபத்தால் 5 வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

டெல்டா நோர்த் தோட்டப்பகுதியிலுள்ள லயன் குடியிருப்பே இந்தத் தீ அனர்த்தத்தால் சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 வீடுகளைக்கொண்ட இந்த லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீயைத் தோட்ட மக்களும் பொலிஸாரும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தீ விபத்தால் குடியிருப்பில் வசித்த சுமார் 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கை நீதிமன்றத் தீர்ப்புகள் மீது திருப்தி இல்லை என்கின்றார் மாவை

### மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம் நினைவு நிகழ்வில் உரை



மட்டக்களப்பு,டிசெ.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வழக்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் விசாரணைக்கு எடுக்கப்பட்டாலும் இலங்கை அரசாங்கத்தின் நீதிமன்றத் தீர்ப்புக்களின் மீது நாங்கள் திருப்தி கொள்ளமாட்டோம் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 11ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று மாலை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித்தலைவர் கி.ஜோன் தலைமையில் நடைபெற்றது.

பக்கம் 19 >>>

## ரவிராஜ் கொலை வழக்குத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடிவு

கொழும்பு, டிசெ.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை வழக்குத் தொடர்பில் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதனைக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 20 >>>

## தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆப்பு வைக்கும் அரசின் முயற்சிக்கு கூட்டமைப்பு உதவுகிறது

### பரராஜசிங்கம் நினைவுரையில் கஜேந்திரகுமார் காட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.26

தமிழ்த் தேசிய உணர்வுமிக்க அரசியலுக்கு நிரந்தரமாக முற் றுப்புள்ளி வைக்கும் – ஆப்பு வைக்கும் – சிறிலங்கா அரசின் சதிச் செயலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முற்றும் முழுதாக உதவி புரிகின்றது.

– இவ்வாறு கூறி காட்டமாகக் கண்டித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம்.

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வில்

பக்கம் 19 >>>

## முன்னாள் போராளி ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

### வவுனியா புளியங்குளத்தில் நேற்று சம்பவம்



வவுனியா, டிசெ.26

பேருந்துக்காக காத்திருந்த முன்னாள் போராளி ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா – புளியங்குளத்தில் இடம்பெற்றது.

நெடுங்கேணி – குளவிசுட்டா னைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆசீர்வாதம் ஸ்ரீதீபன்

பக்கம் 19 >>>

## ரூ.72 கோடியில் நவீன சிகிச்சைக் கூடம் யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்க எதிர்பாரம்!

### 8 மாடிக் கட்டடத் திட்டத்துக்கு ஆப்பு வைக்கும் வைத்தியர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.26

72 கோடி ரூபா செலவில் யாழ். மருத்து பீடத்தால் யாழ். போதனா வைத்தியசாலையை அண்மித்து அமைக்கப்பெறவிருக்கும் 8 மாடிகளைக்கொண்ட கற்றல் – கற்பித்தல் தொகுதிக்கான கட்டட வேலைகள் ஆரம்

பக்கம் 20 >>>

காலைக்கதிர்



### சீறுகின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் கல்வியைச் சீரழிக்க முயல்கின்றனர்!

### அதிபர்கள் நியமனப் பிரச்சினையை ஒட்டி அறிக்கை

யாழ்ப்பாணம் டிசெ.26

வடக்கில், அதிபர் தரம் III இல் சித்தியடைந்த 388 அதிபர்களுக்கு வடக்கு மாகாண சபை இதுவரை பாடசாலைகளை வழங்கவில்லை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், வடக்கு மாகாணக் கல்விவிடயத்தில்மாகாணசபை உரிய அக்கறையுடன் செயற்படத் தவறியுள்ளது. மாகாண சபையில்உள்ளஉறுப்பினர்கள் தத்தமது தனிப்பட்ட நலன்களுக்காகக் கல்வியைச் சீரழிக்க முயல்கின்றனர் என்றும் மேற்படி சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கு மாகாணம் கல்வியில் கொடிகட்டிப்பறந்த காலத்தை நாம் மறந்துவிட முடியாது. பொருளாதார வசதிகள் அற்ற நிலையில் பல்வேறு அடக்கு முறைகளுக்கும், யுத்த காலங்களுக்கும் மத்தியில் வடமாகாணத்தின் கல்வி நிலை உயர்வாகவே இருந்தது. ஆனால் இன்று மாகாணங்களுள் கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அதிலும் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் வசம் வந்த பின்னர் இத்தகைய நிலை மிக மோசமாக உள்ளமை மிகுந்த வேத னைக்குரிய விட யமாகும்.

தற்போது அதிபர் சேவைத் தரம் – III பெற்றவர்களின் நியமனம் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் நடவடிக்கை மிகுந்த வேதனை தருவதாக உள்ளது.

இது தொடர்பாக நாம் அனைவருக்கும் தெளிவுபடுத்தும் வகையில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடுகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் 1064 மாகாணப் பாடசாலைகளும், 22 தேசியப் பாடசாலைகளும், 6 தனியார் பாடசாலைகளுமாக மொத்தம் 1092 பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் 1AB பாடசாலைகள் 103உம், 1C பாடசாலைகள் 117உம், II ஆம் தரப் பாடசாலைகள் 319உம், III ஆம் வகைப் பாடசாலைகள் 460உம் உள்ளன.

தற்போது 388 ஆசிரியர்களுக்கு தரம் – III அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 424 அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் வெற்றிடங்கள் உள்ளன.

அதிபர் வெற்றிடம் 220 உள்ளது.

பிரதி அதிபர், உதவி அதிபர் வெற்றிடம் 133 உள்ளது. பதில் அதிபர்கள் 71பேர் உள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களில் அதிகமான ஆசிரியர்கள் அதிபர் பரீட்சையில் சித்திபெற்றனர்.

அதேவேளை மேற்குறித்த கல்வி வலயங்களில் வெற்றிடப் பாடசாலைகள் குறைவாகவே உள்ளன.

வெற்றிடப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகமாக வன்னிப் பிரதேசத்திலேயே உள்ளன.

சித்திபெற்ற அதிபர்களில் கணிசமானோர் க.பொ.த உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பிப்பவர்கள். பட்டதாரி ஆசிரியர்கள். இவர்களில் 150க்கும் மேற்பட்டவர்கள் பாடசாலை அதிபர் கடமையைவிட தமது பாடத்துறையைக் கற்பிக்கும் நோக்கில் பிரதி அதிபர், உதவி அதிபர் பதவிகளை எழுத்துமூலமாகக் கோரியுள்ளனர். இவர்களில் 70பேர் வலிகாமம் கல்வி வலயம் சார்ந்தவர்கள்.

16 அதிபர்கள் கடமை நிறைவேற்றும் பணியில் இருந்து அதிபர் தரம் –III கிடைக்கப்பெற்றுள்ளனர். இவர்களுள் இன்னும் சிலருக்கு கல்வி நிர்வாக சேவை நியமனம் கிடைத்துள்ளது.

இத்தகைய புள்ளி விவரங்களுக்கு அப்பால் தற்போது நியமனம் கிடைக்கப்பெற்ற அதிபர்கள் III ஆம் வகைப் பாடசாலைகளுக்கே அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள். மேலதிகமாக 1AB பாடசாலைகளுக்கும், 1C பாடசாலைகளுக்கும், III ஆம் தரப்பாடசாலைகளுக்கும் பிரதி அதிபர்களாகவும், உதவி அதிபர்களாகவும் நியமிக்கத் தகைமை உடையவர்கள்.

இத்தகைய நிலை எவற்றையும் புரிந்துகொள்ளாமல் கல்வி அமைச்சரினதும், கல்வி அமைச்சு செயலாளரினதும், மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், 12 வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களினதும் கருத்துக்களைப் புறந்தள்ளி வடக்கு மாகாணசபை தவறான முடிவுகளை எடுப்பது மிகவும் வேதனைதரும் விடயமாக உள்ளது.

வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக ஒருமுடிவைஎடுப்பதும், அதற்கு எதிராக முதலமைச்சர் தொழிற்படுவதும், மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமது சொந்த நலனுக்காக ஒரே கட்சியில் இருந்துகொண்டு கலந்து ஆலோசிக்காமல் மாகாண சபையில் எதிரும், புதிருமாக விவாதம் நடத்துவதும் வேடிக்கையாக உள்ளது.

வடபுலத்துக் கல்வி சட்டகத்தைச் சரியாக விளங்கிக்கொள்ளாமல் இவ்வாறு நடந்துகொள்வது கல்விப்புலம் சார்ந்தவர்களின் மனங்களைப் புண்படுத்துவதாகவும், ஆத்திரமூட்டுவதாகவும் உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களும்கடமைநிறைவேற்றும் பணியில் உள்ளவர்கள். பெருமளவான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ளவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் பலர் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ள அதிபர்கள். உதவிக் கல்விப் பணிப்பாளர்களில் 90விதமானவர்கள் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ள ஆசிரியர்கள்.

விசேடமாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பாடத்துறை சார்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் எவரும் கல்வி நிர்வாக சேவை சார்ந்தவர்கள் அல்லர். இதைவிட வடமாகாணக்கல்வித் திணைக்களத்தில் கூட ஆசிரிய வகைசார்ந்த பலர் பணிப்பாளர்களாக உள்ளமை வேடிக்கையான விடயம்.

இது இவ்வாறு இருக்க, புதிய அதிபர்களையும், கடமை நிறைவேற்றும் அதிபர்களையும் பகைவர்களாக்கி போராட்டங்களை நடத்தி கல்வியில் பாதிப்பை ஏற்படுத்த சில தீயசக்திகள் வடக்கு மாகாணத்திற்குள் ஊடுருவியுள்ளன.

இதனை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கடமைநிறைவேற்றும் அதிபர்களின் ஒன்றுகூடலில் வெளிப்படையாக பேசியுள்ளார். இதற்கு புதிய நியமனம் கிடைக்கப்பெற்ற அதிபர்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நியமனம் இன்னும் பின்தள்ளப்படுகின்றது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திற்குள்ளும் ஊடுருவிநாசகார வேலைகளைப் புரிகின்றனர். அதிபர் நியமனம் தொடர்பாகக் குழப்பநிலை கிழக்கு மாகாணத்தில் இன்னும் நீடித்த வண்ணம் உள்ளது. மற்றைய ஏழு மாகாணங்களிலும் இல்லாத நெருக்கடியை வட, கிழக்கு மாகாணத்திற்கு ஏற்படுத்தி கல்வியைச்சீரழிக்கமுனைவதனை நாம் அனுமதிக்க முடியாது.

இதனைப் புரிந்துகொள்ளாத மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் துஷ்டர்களுக்குப் பக்கபலமாக நின்று போராட்டங்களைத் தூண்டிவிடுவது ஆரோக்கியமானது அல்ல. இதைவிட வடக்கு மாகாணத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொண்டு சபையின் ஏகோபித்த முடிவுகளைச் சபைக்கு ஊடாக வெளியிட வேண்டும். அதுமட்டுமன்றி கல்வி தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொள்ளாத மாகாணசபையின் உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் எம்மால் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதனை சங்கம் வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கிறது. – என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மேற்கு, கிழக்கில் வேகமாக பரவும் ஆபத்தான டெங்கு

கொழும்பு ,டிசெ.26

மேற்கு மாகாணத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துவருவதாக, சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. கடந்த வார இறுதியுடன் கம்பஹா, களுத்துறை , கொழும்பு மாவட்டங்களில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரத்தையும் தாண்டி விட்டதாக , அமைச்சின் உத்தியோக பூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நோயாளருக்கு மூக்கு, தோல் பகுதிகளில் இருந்து அளவுக்கு அதிகமான இரத்தம் வடிவ தாகவும் அது மிகவும் ஆபத்தான சமிக்ஞை என்றும் வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் கல்முனை மாவட்டத்தில் டெங்கு வேகமாகப் பரவி வருவதாக சுகாதாரத் திணைக்கள் அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

மேலும் அஸ்பிறின் டிஸ்பிறின் போன்ற மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டால், ஈரல் வியாதி உண்டாகும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பாதிப்புகள் ஏற்படாமல்இருப்பதற்கு மருத் துவக் கவனம் தவறாது எடுப்பதும் அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பரிசில் வழங்கல்

கரவெட்டி மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறந்த கல்விப் பெறுபேற்றை பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு, நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.ஸ்ரீகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலாளர் அ.வினோராஜ், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சாந்திகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-40)

## வெள்ளரசு மரத்தை தரிசித்தார் ஜனாதிபதி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது துணைவியாருடன் அனுராதபுரத்திற்குச் சென்று புனித வெள்ளரசு மரத்தை தரிசித்து ஆசீர்வாதம் பெற்றார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் அனுராதபுரம் புனித பிரதேசத்துக்கு சென்ற ஜனாதிபதி அட்டம ஸ்தானாதிபதி அ[illegible]வணக்கத்துக்குரிய பல்லேகம ஸ்ரீனிவாச தேரரைச் சந்தித்[illegible] அவரது சுக நலன்களை வி[illegible]சாரித்தார்.

அதன் பின்னர் புனித வெள்ளரசு மரத்தை தரிசித்ததுடன், மத குருமார்கள் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசீர்வதித்தார்கள்.

ருவன்வெலிசாய வளாகத்தில் நடைபெற்ற சமய நிகழ்வுகளிலும் ஜனாதிபதி பங்குபற்றினார்.

மேற்படி வழிபாட்டு நிகழ்வுகளில் ஜனாதிபதியின் பாரியார் ஜயந்தி சிறிசேன, வடமத்திய மாகாண ஆளுநர் பி.பீ. திசாநாயக்க ஆகியோரும் பங்கு பற்றினார்கள்.

## மழைவேண்டி கிளிநொச்சியில் யாகம்



கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியை போக்கும் நோக்கில் மழை வேண்டி நேற்று விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

மக்கள் மற்றும் விவசாயிகள் ஒன்றிணைந்து இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தில் விடே வழிபாடுகளையும் யாக பூஜையும் நடத்தினர்.

இரணைமடு விவசாய சம்மேளனம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த வழிபாட்டில் கனகாம்பிகை அம்மனுக்கு 1008 இள நீர் அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டதுடன் விசேட யாக பூஜையும் இடம் பெற்றுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக இரணைமடு குளத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் 30 ஆயிரம் ஏக்கர் மானாவாரி பயிர்ச் செய்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 30 ஆயிரம் ஏக்கர் விளை நிலம் நீர்ப்பாசன குளங்களின் கீழ் உள்ளமையால் அவை ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளன. எனினும் தொடர்ந்தும் பருவ மழை பொய்க்குமாயின் அவையும் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இரணைமடு குளத்தின் கீழ் 20 ஆயிரம் ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் இரணைமடு குளத்தில் சேகரிக்கப்பட்ட நீர் திறந்து விடப்பட்டு அதன் கீழ் பயிரிடப்பட்ட காலபோக நெற் செய்கை தற்காலிகமாக பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இரணைமடு குளத்தின் நீர்மட்டமும் தற்போது குறைவடைந்துள்ளதால் எதிர்வரும் சில நாள்களுக்குள் பருவ மழை பொழிய வேண்டும். இந்த நிலையிலேயே யாகம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# தமிழ் இன்றும் உயிரோடு இருப்பதற்கு யாழ்ப்பாணத் தமிழர்கள்தான் காரணம்

## யாழ். இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் பெருமிதம்

சுன்னாகம், டிசெ.26

''தமிழ் இன்றும் உயிரோடு இருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் தான். யாழ்ப்பாணத் தமிழுக்கென்று தனிச் சிறப்பு உண்டு.''

இவ்வாறு யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் நாவலர் தின விழா நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ச.லலீசன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட, யாழ். மாவட்ட 30 பாடசாலைகளுக்கு நாவலர் திருவுருவச் சிலைகளை வழங்கி வைத்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

''நமது மொழி சிறப்பு வாய்ந்தது. யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு என்று தனிச்சிறப்பு உண்டு. தமிழ் மொழி தனிச் சிறப்பு வாய்ந்தது. விசித்திரமான மொழி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நமது தமிழ் மொழியைப் பேசும் போது சந்தோஷம், ஆனந்தம், முக்கியத்துவம் புரிகிறது. மற்றைய மொழிகளைத் தெரிந்திருந்தாலும் கூட தமிழை பேசும் போது ஆனந்தம் அடைகின்றோம்.

சமீபத்தில் நெல்லைக் கண்ணன் பேசும்போது யாழ்ப்பாணத்து தமிழின் சிறப்பு பற்றி கூறினார். என்னுடைய கருத்தை அவர் ஏற்றுக்கொண்டார். எனக்கு பெருமையாக இருந்தது. நான் இந்த மண்ணில் வசிப்பதில் பெருமையடைகின்றேன்.

ஆறுமுகநாவலர்சிலை மாணவர்களுக்கு கொடுக்கிறோம். சிலையை வெறும் சிலையாகக் கொடுக்கவில்லை. இந்த விடயம் மகிழ்ச்சிபடக் கூடிய விடயம். நாமெமது தாய் மொழி தமிழை அள்ளிக்கொடுக்கிறோம்.







யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நாவலரது நூல்கள் ஏராளமாக இருந்தன. யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட போது நூல்கள் அழிவடைந்துவிட்டமை மன வேதனையாக இருக்கின்றது.

தஞ்சாவூர் பக்கத்தில் கரந்தை தமிழ்ச் சங்கம் இருக்கின்றது. அங்கு நாவலரது பழமையான நூல்கள் இருப்பதை நான் சமீபத்தில் அறிந்தேன். அங்குசென்று நூல்களின் நகல்களைக் கேட்டோம். அவர்கள் பத்து நூல்களின் நகல்களைத் தருவதாக கூறியுள்ளார்கள். பெப்ரவரி மாதம் யாழ். பொது நூலகத்தில் கையளிக்கவுள்ளோம்.

மாணவர்கள் ஆறுமுக நாவலரைப் பற்றி நிறையக் கற்கவேண்டும். பெற்றோர்கள் இதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். தமிழ் இனம் சந்தோசப்படும்.

சமூகம் இல்லை என்றால் சமயம் இல்லை. சமயம் இல்லை என்றால் சமூகம் இல்லை. ஆறுமுகநாவலர் இல்லை என்றால் தமிழ் இல்லை எனக் கூறுவது மிகையாகாது. நாவலர் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகையவர்க்கு விழா கொண்டாடுவது பாராட்டுக்குரியது.

தமிழ் மொழியை எப்படியும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இது வேதனை அளிக்கின்றது. இவ்வாறான விழாக்களில் தமிழை எவ்வாறு பேசவேண்டும் - பாதுகாக்க வேண்டும் என்பதனை அறிந்து கொள்கின்றோம்.

எமது தமிழ் மொழி பழங்காலத் தொன்மை வாய்ந்த மொழி, செம்மொழி, ஒரு சிறப்பு மொழியாக இருக்கின்றது. தமிழைப் பல்வேறு வழிகளில் கற்றுக்கொள்ளலாம். எனவே எம் தாய் மொழியாகிய தமிழ் மொழியை நாம் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும். -என்றார் (ஐ-21-54)

## பரிசளிப்பும் சஞ்சிகை வெளியீடும்

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத, உள்ளூராட்சி மாத பரிசளிப்பு விழாவும் 'சென்னி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் சி.சிறிபாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தனும், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் த.ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோரும் கலந்து கொள்வர்.

சஞ்சிகை வெளியீட்டுரையை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் நிகழ்த்துவார். முதற் பிரதியை இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் பெற்றுக் கொள்வார். (ஐ-40)

# ரவிராஜ் கொலை குறித்த தீர்ப்பு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

## சலிப்புடன் தெரிவித்தார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு, டிசெ.26

''நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை பார்த்தால் ரவிராஜ் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு தன் காவலரையும் சுட்டுவிட்டாரோ என்று சலிப்புத்தான் வருகிறது.''

- இவ்வாறு தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோகணேசன் கூறியுள்ளார்.



இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

நண்பர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களையும், ஏனைய முற்போக்காளர்களையும் கடும் ஏமாற்றமடைய வைத்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பாக ஆஜரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மேன்முறையீடு செய்யப் போவதாக கூறியிருப்பதை வரவேற்கிறேன்.

அதேவேளை, இந்த வழக்கு விசாரணையில் பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் போக்குகள் குறித்தும் திருப்தியடைய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பிரதமருடனும், கூட்டமைப்பு தலைவருடனும் உரையாட உள்ளேன்.

இந்த நாட்டின் நீதித்துறை மீது உலகமும், தமிழர்களும் நம்பிக்கை வைக்க முடியுமா என்ற கேள்வி இன்று மீண்டும் எழுந்திருப்பது நியாயமானது என்று நினைக்கின்றேன். இந்தத் தீர்ப்பு நிச்சயமாக எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித வுரிமை கூட்டத்தில் எதிரொலிப்பதை தவிர்க்க முடியாது.- என்றார்.(ஐ)



# வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா பிரமனாளங்குளம் பகுதியில், சின்னத்தம்பனை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வெடிபொருள்களை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீலியாமோட்டை, சின்னத்தம்பனை பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வெடிபொருள்கள் இருப்பதை அவதானித்த புலனாய்வுத்துறை அதிகாரிகள் உடனடியாக வவுனியா விமானப் படையினருக்கு அறிவித்தலை வழங்கியுள்ளனர்.

குறித்த இடத்துக்கு விரைந்த விமானப்படையினர் அது குறித்து விசேட அதிரடிப்படையினருக்கு தகவலை வழங்கியுள்ளனர்.

இதன்போது, கைக்குண்டு ஒன்று, மோட்டார் குண்டு ஒன்று, மிதிவெடி 41 போன்ற வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் பகுதியில் பதற்றம் காணப்பட்டது. (ஐ)

# வவுனியாவில் இரு பெண்கள் கரடி தாக்கி காயம்!

வவுனியா, மாமடு பகுதியில் இரு பெண்கள் மீது கரடி தாக்கியதில் அவர்கள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா, மாமடு அட்டமஸ்கட பகுதியில் உள்ள சிறிய காட்டுப் பகுதியில் விறகு வெட்டுவதற்காகச் சென்ற பெண்கள் விறகை வெட்டிக் கொண்டு திரும்பி வந்த போது கரடித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கு.சீலாவதி (வயது 56), எஸ்.சிறியலதா (வயது 53) ஆகிய இருவருமே தலை, முகப் பகுதியில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600

## முதல்வரிடம் சில கேள்விகள்

ஜனவரி 6 ஆம் திகதி கனடாவுக்குச் செல்கிறார் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன். அங்கு தமிழர்கள் அதிகம் வசிக்கும் மார்க்கம் நகரத்தோடு முல்லைத்தீவு நகரை இணைத்து இரட்டை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதே அவரது அந்தப் பயணத்தில் முக்கிய நோக்கம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. தவிரவும், கனடாவின் பிறாம்ரன் நகரம் வவுனியா நகருடன் இதே போன்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முதல்வரை அழைத்திருப்பதாகவும் ஒரு செய்தி.

இதேபோன்று, ஏற்கனவே பிரிட்டனின் கிங்ஸ்ரன் அப்போன் தேம்ஸ் நகராட்சியுடன் யாழ்ப்பாணத்தை இணைத்து கடந்த ஒக்ரோபரில் ஓர் ஒப்பந்தத்தில் முதல்வர் ஒப்பமிட்டிருந்தார். அது தொடர்பான சில கேள்விகளை மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா எழுப்பியிருந்தார். ஆனால், அதற்கு முதல்வர் இன்னும் பதில் வழங்கினாராக இல்லை.

இந்த ஒப்பந்த ஆவணப்படி,அதில் நமது முதலமைச்சர் மார்ச் 30 ஆம் திகதியும் கிங்ஸ்ரன் நகராட்சியின் சார்பில் சபையின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஜீன் 6 ஆம் திகதியும் ஒப்பமிட்டுள்ளனர். ஆனால், முதல்வர் ஒக்ரோபர் 18 ஆம் திகதி இங்கிலாந்து சென்ற போதுதான் அதில் ஒப்பமிடப்பட்டதாக ஊடகங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. எது சரி?

அந்த உடன்பாட்டில் -

யாழ்.மாவட்டத்திலிருந்து ஐக்கிய இராச்சியத்தில் முதலீடு செய்யும் போது முதன்மைத் தெரிவாக கிங்ஸ்ரன் நகர் அமையுமாம். யாழ்ப்பாணத்திலிருந்து பிரிட்டனில் முதலீடு செய்வது குறித்து உடன்பாடு செய்யவா முதல்வர் அங்கு சென்றார்?

புலம்பெயர் தமிழர் யாழ்.மாவட்டத்தில் முதலீடு செய்வதற்கு கிங்ஸ்ரன் நகரசபை நெருங்கிச் செயற்படுமாம். எமது மக்கள் எமது பிரதேசத்தில் முதலீடு செய்வதற்கு நாம் ஏன் கிங்ஸ்ரனுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும்?

கிங்ஸ்ரன் வைத்தியசாலை தம்மிடம் உள்ள மேலதிக சாதாரண மருத்துவ உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதற்கு கிங்ஸ்ரன் நகரசபை தொடர்பாளராகச் செயற்படுமாம். யாழ்ப்பாணம் என்ன அங்கு பாவனைக்குப் பயன்படாத மருத்துவ உபகரணங்களைத் தள்ளிவிடும் இடமா?

கிங்ஸ்ரன் பல்கலைக்கழகத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்த அனுசரணை வழங்குவதும் உடன்படிக்கையின் ஓர் ஏற்பாடாகும், பல்கலைக் கழக விவகாரம் முதலமைச்சரின் வரம்புக்குட்பட்டதல்ல. இதற்கு, பல்கலைக்கழக மட்டத்தில் - உயர்கல்வி அமைச்சு ரீதியில் - செயற்படும் அதிகாரத்தை முதல்வர் பெற்றுள்ளாரா?

கிங்ஸ்ரன் நகரசபை எவ்வாறு வெளிப்படைத் தன்மையுடனும், பொறுப்புக் கூறலுடனும் நிர்வாகச் செயற்பாட்டை நடத்துகின்றது என்ற அரசாட்சி முறையை யாழ்.மாவட்டத்துக்கும் தெரியப்படுத்துவதற்கான ஆதரவை வழங்குமாம்! இது விடயத்தில் வடக்கு மாகாண சபையின் பின்னடைவு நிலையை ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியாகி விட்டது. அதை அங்கிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டுமா?

யாழ்.மாவட்டத்தின் தமிழ்கலாசாரங்களையும், விழாக்களையும், கலாசாரச் செயற்பாடுகளையும் கிங்ஸ்ரன் நகரசபை கற்றுக் கொள்ளல் என்பதும் ஒன்று. அவர்கள் கலாசாரப் பாடம் படிப்பதற்கு அங்கு போய் ஒப்பந்தம் போட வேண்டுமா?

- இப்படி எதிர்க்கட்சித் தலைவர் கிளப்பி, பதிலளிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்ட கேள்விகள் பல.

எம்மிடமும் ஒரு கேள்வி உண்டு. பொதுவாக இரு நகரங்களுக்கு இடையில் ஒப்பந்தம் என்றால், அந்த நகரங்களின் முதல்வர்கள்தான் ஒப்பமிட வேண்டும். அதற்கு மேலிருப்பவர் அல்லர்.

இரண்டு நாட்டு அதிபர்கள் சந்திக்கும் போது கூட பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன. நாடுகள் ரீதியான ஒப்பந்தங்களாக இல்லாமல், ஓர் அமைச்சு ரீதியான ஒப்பந்தமாயின் அந்த அதிபர்கள் முன்னால் நிற்க, சம்பந்தப்பட்ட நாட்டின் - சம்பந்தப்பட்ட அமைச்சின் - இரு அமைச்சர்களுமே அதில் ஒப்பமிடுகின்றமையை நாம் தாராளமாக அவதானிக்கின்றோம்.

இரட்டை நகர ஒப்பந்தம் என்றால் இரண்டு நகர பிதாக்களும்தானே ஒப்பமிட வேண்டும்?

2006 இல் நேர்வேயின் ரொன்ஸோ மாநகரசபை யாழ். மாநகரசபைக்கு சில உதவித்திட்டங்களை வழங்குவதற்காக இரட்டை நகர ஒப்பந்தத்தைச் செய்தது. அப்போது யாழ்.மாநகர சபைக்கு மேயர் இருக்கவில்லை. விசேட ஆணையாளராக இருந்த சி.வீ.கே.சிவஞானம்தானே ஒப்பமிட்டார்...!

முல்லைத்தீவு நகரத்தோடு செய்வதாயின் அந்த பிரதேச உள்ளூராட்சி சபைத்தலைவரோ அல்லது முல்லைத்தீவு மாவட்டத்துடன் செய்வதாயின் அந்த மாவட்ட அரச அதிபர்தானே கையெழுத்திட வேண்டும்?

இரட்டை நகர ஒப்பந்தங்கள் - உள்ளூராட்சி சபை மட்டத்திலேயே செய்யப்பட வேண்டும். பிரதேசத்தில் இருக்கும் ஒரு நகரத்தின் அமைப்புடன் எங்களது ஒரு முழு மாகாணசபையின் முதல்வரே நேரில் சென்று ஒப்பந்தம் செய்வது முறையா? -

அங்குள்ள ஒரு மாகாண அமைப்புடன் அல்லது ஒரு பிராந்திய அரசுடன் எமது மாகாண முதல்வர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது வேறு. சிறிய நகரத்துடன் அதனைச் செய்வது சரியானதாகப்படவில்லையே! அதுவும் கிங்ஸ்ரன் நகரசபை என்பது லண்டன் மாநகர உள்ளூராட்சிக்குக் கீழ் அடுத்த கட்ட அடுக்கில் இருப்பது. அதனுடன் நமது மாகாணம் சமதையாக ஒப்பமிடலாமா?

இந்த இரட்டை நகர ஒப்பந்தம் மூலம் பல பொருளாதார அபிவிருத்தி, ஆரம்பக்கல்வி, சுகாதாரம், சமூக மற்றும் கலாசார, கூட்டுறவு, உள்ளூராட்சி, மாகாண நிர்வாக ஆளுமை அபிவிருத்தி எனப் பல சாதனை நிலைநாட்டப் பிரதமருக்கு எழுத்தில் உறுதி வழங்கியிருக்கிறார் நமது முதல்வர். அவை சாத்தியமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமோ...?!

# சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை

## மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இயங்கும் தொழிற்சாலைகளுக்கு எதிராக இனிவரும் காலங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வெளியேற்றப்படும் வாயு தொடர்பான தரம் மற்றும் அளவு சம்பந்தமாக அனைத்துத் தொழிற்சாலைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக அந்த அதிகார சபையின் சூழல் பாதுகாப்பு கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் சஞ்சய ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளால் நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

இவை தவிர சூழலுக்குப் பாதகமான ஒலிகளை எழுப்புதல், ஒழுங்கற்ற நீர் பயன்பாடு, ஆபத்துக்களை ஏற்படுத்தும் கழிவுகளை சுற்றாடலுக்கு வெளியேற்றல் போன்றவற்றில் ஈடுபடும் தொழிற்சாலைகள் தொடர்பாக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (எ)

# இயற்கைப் பேரிடர் தணிப்பு தின நிகழ்வு இம்முறை முல்லைத்தீவில்

## வட மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில்

முல்லைத்தீவு, டிசெ.26

வடமாகாண சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் இயற்கைப் பேரிடர் தணிப்புத் தின நிகழ்வு இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

செம்மலை மகாவித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக உள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், சாந்தி சிறீஸ்கந்தராசா, வட மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினர்களான ஆ.சி.து. ரவிகரன், க.சிவநேசன், யாசீன் ஜவாஹிர், ஆ.புவனேஸ்வரன், முல்லைத் தீவு அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது 'அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் தமிழர்களின் பாரம்பரிய அறிவு' என்ற கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழகப் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜாவின் விசேட உரை இடம்பெற இருப்பதோடு, யாழ். ராகஸ்வரம் இசை மன்றத்தால் பேரிடர்கள் தொடர்பாக 'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்ற விழிப்புணர்வு நாடக அரங்கமும் நடைபெறவுள்ளது.

இலங்கையின் கரையோர மாவட்டங்களை 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி தாக்கியதில் 40 ஆயிரம் வரையான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அத்துடன் பெரும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன.

சுனாமி தாக்கிய தினமான டிசெம்பர் 26ஆம் திகதியை வட மாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத் தினமாக வட மாகாண சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதை அடுத்து, ஆண்டு தோறும் வடமாகாண சுற்றாடல் அமைச்சு இதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றது. கடந்த ஆண்டு இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பதவிக்காலம் மேலும் நீடித்தல் அவசியம்

## சமுதாய அபிவிருத்தி அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்று தெரிவித்தார் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் காலத்தை நீடிப்பது அவசியமா என்று ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:

கள்வர்களை சிறையில் அடைத்தால்தான் நாட்டைத் திருத்த முடியும். நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

கள்வர்களை சிறையில் அடைப்பதன் மூலம் நாட்டைத் திருத்த முடியும் வெற்று வார்த்தைகளைப் பிதற்றுவதில் எவ்வித பயனுமில்லை.

நினைத்த அளவுக்கு நிதி மோசடி விசாரணைப் பிரிவில் பணிகள் நடைபெறவில்லை என்பது உண்மைதான்.

கள்வர்கள் பிடிக்கப்பட்டார்கள். பெரிய திருடர்கள் இருக்கின்றபோது சிறிய திருடர்களே பிடிக்கப்பட்டனர். பெரிய திருடர்கள் பிடிபடுவார்கள் என்று நாம் காத்திருந்தோம். இந்த அரசாங்கத்தின் கொள்கைகள் சிறப்பானவை.

மேலும், கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது.

திருட்டைப் பிடிப்பதற்கு சாட்சியங்கள் தேவை அல்லவா? அவற்றைத் தேடுவதற்கு சில காலம் தேவைப்படுகின்றது. எனினும் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பணி அவசியமானது.-என்றார்.

# நத்தார் மரம் நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்

## அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

காலிமுகத் திடலில் அமைக்கப்பட்டுள்ள நத்தார் மரம், சகல இனங்களுக்கும் இடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பக் காரணமாக அமையும் என்று துறைமுகங்கள் புனர்வாழ்வு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த நத்தார் மரத்தை அமைப்பதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தமது உதவிகளை பல்வேறு விதமாக வழங்கினார்கள். மத விமர்சனங்களை மேற்கொள்வோர் இந்த நத்தார் மரத்தை விமர்சனம் செய்து வருகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் நள்ளிரவு நத்தார் மரத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (எ)

### நாளை

27.12.2016
செவ்வாய்க்கிழமை
திதி : திரயோதசி மு.ப. 9.40 வரை
நட்சத்திரம்: அனுசம் காலை7.52 வரை
சுபநேரம் : 10.57 - 12.27
இராகுகாலம் : 3.27 - 4.57

# உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்புக்கு முன் அரசில் இருந்து விலகிக் காட்டுங்கள்!

## பிரசன்ன ரணதுங்க எம்.பி. சவால்



கொழும்பு, டிசெ.26

"நாட்டையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஒரே விதமாக நேசிப்பவர்களாக இருந்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்படும் முன்னர் கலப்பு அரசில் இருந்து விலகிக் காட்டுங்கள்.''

-இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க சவால் விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையை தெளிவுப்படுத்தும் நோக்கில் மினுவாங்கொடை பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை அமைக்க போவதாக வாயால் சொல்லிக் கொண்டு இருக்காமல் அதனை செயலில் ஒப்புவித்துக்காட்ட இன்னும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் வெளியேறுங்கள் எனக் கூறாமல் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் எந்த வெட்கமும் இன்றி அவர்களுடன் இருக்கின்றனர்.

இப்படியான நிலைமையில் எதிர்காலத்தில் நடத்தப்படும் எந்தத் தேர்தலாக இருந்தாலும் கூட்டு எதிர்க்கட்சி தனித்து போட்டியிட நேரிடும்.

கூட்டு எதிர்க்கட்சி எதிர்வரும் தேர்தல்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் போட்டியிட்டு அரசை நிச்சயமாகத் தோற்கடிக்கும்.

அரசில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அடுத்த தேர்தலில் மஹிந்த தரப்பும் மைத்திரி தரப்பும் மீண்டும் இணைந்து போட்டியிடுவார்கள் என்று மக்கள் மத்தியில் பொய்யான கருத்தைப் பரப்பி வருகின்றனர்.

யார் என்ன கூறினாலும் அவர்கள் இந்த கலப்பு அரசில் இருக்கும்வரை நாங்கள் அவர்களுடன் இணைய மாட்டோம்.

தமது அரசியல் வங்குரோத்து நிலைமையை மறைக்கவே அரசில் இருக்கும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மக்கள் மத்தியில் இப்படியான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

தலையில் மூளை இருக்கும் எவரும் இந்த அரசில் இணையவும் மாட்டார்கள், உதவி செய்யவும் மாட்டார்கள்.

இது மக்களுக்கான அரசு அல்ல.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைப் பாதுகாப்பதாகக் கூறுவோர் எப்படி இந்த அரசுக்குள் இருக்க முடியும்? - என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# மின் விநியோகத்தை தொடர்வதில் சிக்கல்

## மின்வலு பிரதியமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ.26

மின்சார விநியோகத்தைத் தொடர்ந்தும் வழங்குவது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது என மின்வலு பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை மின் நிலையத்துக்குப் பின்னர், நாட்டில் பிரதான மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படாமை இந்த சிக்கலுக்குக் காரணமாக அமைந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சூரிய சக்தி மூலம் 50 மெகா வோட் மின்சக்தியை தேசிய கட்டமைப்புக்கு வழங்க முடிந்துள்ளது.

நீர் மின் உற்பத்தி தொடர்ந்தும் நெருக்கடிக்கு உள்ளாகுமாயின் நாட்டுக்கு இருக்கும் ஒரே சிறந்த மாற்று வழி சூரிய சக்தியில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# நாட்டுக்குத் தேவையற்ற ஒன்றே நிதி மோசடி விசாரணைப் பிரிவு

## முன்னாள் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.26

நிதி மோசடி விசாரணைப் பிரிவு நாட்டுக்குத் தேவையற்ற ஒன்றாகும் என்று முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பதவிக் காலம் நீடிப்புக் குறித்து வார இறுதி ஊடகம் எழுப்பிய கேள்விக்கே ஒன்று அவர் இந்த பதிலை அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நிதி மோசடி விசாரணைப் பிரிவு அரசமைப்புக்கு முரணான வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.


இந்தப் பிரிவு பிரதமர் அலுவலத்தின் ஊடாக சட்டவிரோதமான முறையில் இயக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவோர் உறுப்பினரும் பொலிஸ் இராச்சியக் கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்தப் பிரிவு ஏகாதிபத்திய பாசிசவாத பயணத்தின் ஆரம்பமாகவே கருதப்பட வேண்டும்.

பொலிஸ் இராச்சிய எண்ணக்கரு நல்லாட்சி அரசுக்குப் பொருத்தமுடையதல்ல.

இந்த முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்களின் எதிர்ப்பை தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.- என்றார். (ஐ)






இலங்கை வங்கியின் வட்டுக்கோட்டைக் கிளையின் ஏ.ரி.எம்.இயந்திரத்தின் கட்டடம் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஜேம்ஸ் பிரபாகரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. (ஐ-54)

# சொத்து விவரம் வழங்காதோர் மீது நடவடிக்கை

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.26

சொத்து விவரங்கள் பற்றிய ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காத அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

எதிர்வரும் 30 ஆம் திகதி சொத்து விவரங்களை வழங்காத அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி கூடி இது குறித்து விசேட ஆய்வுகளை நடத்தவுள்ளனர்.

ஆய்வுகளின் பின்னர் சொத்து விவரங்களை வழங்காத அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

சொத்து விவரங்கள் பற்றிய அறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் பல இன்னமும் கிடைக்கவில்லை.

இந்த அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் தொடர்பில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

சொத்து விவரங்களை ஒப்படைக்குமாறு ஏற்கனவே அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சிலர் வேண்டுமென்றே இவ்வாறு விவரங்களை வழங்க மறுத்து வருகின்றனர்.-என்றார். (ஐ)

# பயணச் சீட்டுப் பெறாவிட்டால் தண்டப் பணம் ஆயிரம் ரூபா!

கொழும்பு, டிசெ.26

பயணச் சீட்டு இன்றி பயணிப்போருக்கான தண்டப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணச் சீட்டு இன்றி பயணிப்போருக்கானதண்டப்பணமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான தண்டப் பணத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

எனவே, பஸ்களில் பயணிக்கும் பொது மக்கள் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையா?

## சட்டம் பாயும் என எச்சரிக்கிறார் பிரதியமைச்சர் அமீர் அலி



மட்டக்களப்பு மாவட்டம் போதைப் பொருள் பாவனையில் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தில் உள்ளது. இங்கு பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போதைப் பொருள் பாவனை ஊடுருவியுள்ளது. இவர்களைக் குறிவைத்து விற்பனை செய்யும் குழுக்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் . ஆதாரத்துடன் அவர்கள் கைது செய்யப்பட்டால் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை எச்சரிக்கையாகக் கூறிக்கொள்கின்றேன்.

- இவ்வாறு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலகத்தில் கிராமிய பொருளாதார அமைச்சின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான உபகரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை கல்வியில் அபிவிருத்தி அடைந்து வரும் நிலையிலே அதற்கு நிகராக போதைப்பொருள் பாவனையாளர்களும் அதிகரித்துச் செல்கின்றார்கள். தங்களது வாழ்வாதாரத்தைக் கஷ்டமின்றி நடத்த வேண்டும் என்பதற்காகத் தொழிலுக்கு செல்லும் அதிகமானவர்கள் உழைத்த பணத்தின் பெரும்பாலானவற்றைப் போதை பொருள்களுக்குச் செலவிடுவது கவலையளிக்கின்றது.

இங்கு தொழில் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. மக்கள் நாளாந்தம் வேலை செய்கின்றார்கள் .ஊதியம் பெறுகின்றார்கள் .ஆனால் வீடுகளுக்குச் செல்லும் போது பணம் இருப்பதில்லை. உழைத்த பணத்தை மதுபானசாலைக்குக் கொடுத்து விட்டுச் செல்கின்றார்கள். வெயில், மழை என்று பாராது தங்களது வியர்வை சிந்தி உழைக்கும் பணம் இவ்வாறு எந்த ஒரு பயனும் இல்லாமல் வீணாகுவது ஏற்றுக் கொள்ள முடியாத செயலாகும்.

நாட்டிலே அதிகமான குற்றச் செயல்கள் இடம்பெற போதைப்பொருள் பாவனையே காரணமாகும். எதிர்காலச் சமூகத்தைப் போதைப் பொருள் பாவனையற்ற சமூகமாக உருவாக்க வேண்டும்.

கிழக்கில் போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்காக எதிர்வரும் ஆண்டில் கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 15 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து பல்வேறு வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க இருக்கின்றோம்.-என்றார். (ச)

# மாகாணசபை அதிகாரங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றமையை ஏற்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.26

புதிதாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள விசேட அபிவிருத்தி அமைச்சு மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கபளீகரம் செய்யும் வகையில் செயற்படுகின்றமையை,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்காது.

-இவ்வாறு கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் புனரமைக்கப்பட்ட வீதியை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசேட அபிவிருத்தி அமைச்சர்களை உருவாக்கும் கருத்து தற்போது அரசு மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்றது. மாகாணங்களின் அதிகாரங்களைப் பலப்படுத்தி, நிதி வருவாயைப் அதிகரித்து மக்களுக்குக் கூடுதலான பணிகளைச் செய்யவேண்டிய நிலைமையில் நாம் உள்ளோம். எமது மக்களைப் பொறுத்தவரையில் அரசு நேர்மையாகச் செயற்பட்டால் ஏற்றுக்கொள்வார்கள். பாரபட்சத்துடன் செயற்பட்டால் எதிர்ப்பார்கள்.-என்றார். (ச)

# அட்டாளைச்சேனை அபிவிருத்திக்கு ரூ. 528 மில்லியன் நிதி ஒதுக்கீடு!

அட்டாளைச்சேனை,டிசெ.26

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக சுமார் 528 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் எஸ்.எல்.எம்.பழீல் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில், பாலமுனை ஆகிய பிரதேசங்களிலும் இவ்வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வீதிகளின் இரு மருங்குகளிலும் புதிய மின்விளக்குகளைப் பொருத்துதல், வடிகான்களைப் புனரமைத்தல் மற்றும் நடைபாதை அமைத்தல், நவீன பஸ் தரிப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகளே மேற்கொள்ளப்படவுள்ளன. (ச)

# வேறுபாட்டால் பிளவுபட்டு நின்ற மக்களை கிறிஸ்துவின் பிறப்பு ஒன்று சேர்த்துள்ளது

## சிறைக் கைதிகள் மத்தியில் மட்டு.ஆயர் அருளுரை

மனிதர்கள் சாதி, மத மற்றும் இன, பிரதேச வேறுபாடுகளால் பிரிந்துள்ளனர். ஆனால் கிறிஸ்துவின் பிறப்பு எங்களை ஒன்று சேர்த்துள்ளது. நாங்கள் அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள்.

- இவ்வாறு மட்டு., அம்பாறை மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைக்கைதிகள் விடுதலையும் நத்தார் வழிபாடுகளும் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை நடைபெற்றன. இதில் கலந்து கொண்டு நற்செய்தி வழங்கினார்அவர். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எல்லாக் குழந்தைகளும் பிறக்கும் போது அழும். அவ்வாறே இயேசு பாலகரும் பிறக்கும் போது அழுதார். அந்த அழுகை உலகையே விழித்தெழச் செய்தது. இந்தக் குழந்தையின் பிறப்பு வரலாற்றையே மாற்றியமைத்தது. மனிதர்கள் மிருகங்களாக மாறிக் கொண்டிருக்கும் வேளையில் அந்த மிருக குணத்தில் இருந்து மனிதர்களை மாற்றுவதற்காக இயேசு பிறப்பெடுத்தார்.

பாவம் செய்ததன் காரணமாகக் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் இந்தப் பிளவு ஏற்பட்டது. அதன் காரணமாகவே தனது மகனை அனுப்பி இரண்டு பேரையும் இணைக்க விரும்பினார் கடவுள். அந்த இணைப்பாளராகவே இயேசு கிறிஸ்து இருக்கின்றார்.

எங்களுக்கிடையில் இனி வேறுபாடுகள் கிடையா. ஆண், பெண் என்ற வேறுபாடுகளும் கிடையா. செல்வந்தன், பிச்சைக்காரன் என்ற வேறுபாடுகளும் கிடையா. சாதி, இன மற் றும் மத வேறுபாடுகள் எதுவும் இல்லாமல் நாங்கள் ஒரே கடவுளை வணங்குவோம்.

இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரிய நாள் அல்ல. உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஏதோ ஒரு வகையில் கொண்டாடப்படுகின்றது. - என்றார். (ச)

# கண்டல்காட்டு மின்சார வேலி: தற்காலிகமாக இடைநிறுத்தம்!

கிண்ணியா,டிசெ.26

கிண்ணியா கண்டல்காட்டுக் கிராமத்தில் மின்சாரவேலி அமைக்கும் பணி நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மத்திய சுகாதாரப் பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எச்.எம்.எம்.பாயீஸ் தெரிவித்தார்.

இந்தக் கிராமத்தில் யானைகளின் நடமாட்டத்தைத் தவிர்க்கும் வகையில் வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த 23ஆம் திகதி மின்சார வேலி அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்த மின்சார வேலி தமது காணிகளுக்கு ஊடாக அமைக்கப்படுவதால் இதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி காணிகளை அடையாளம் காண உதவுமாறும் மத்திய சுகாதாரப் பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எச்.எம் எம்.பாயீஸிடம் காணி உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனையடுத்தே மின்சார வேலி அமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ச)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையின்11ஆவது வருட நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுன்ற உறுப்பினருமானமாவை சேனாதிராசா, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண.பொன்னையா ஜோசப், நாடாளுமன்ற உறுப்பினர் கள்ளனப்பலரும்கலந்து கொண்டனர். (ச)

# அரச காணிகள் விற்பனை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குக!

## நாடாளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் வேண்டுகோள்

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் அரச காணிகளை விற்பனை செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உள்ளது. ஆகவே, பிரதேச செயலாளர் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சீனித்தம்பியோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகரைப் பிரதேசத்திலுள்ள புச்சாக்கேணி மற்றும் கதிரவெளி பகுதிகளில் அரசகாணிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.இதற்கு பொலிஸாரும் துணைபோகின்றனர் என கிராம மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணிகளை விற்பனை செய்வது தொடர்பில் பிரதேச செயலாளர் கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாகரைப் பிரதேசத்தில் பெரும்பாலான விவசாயிகள் வாழ்கின்றனர். இந்தப் பகுதிகிகளில் விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படும் சலுகைகள் பெரும்பாலும் கிடைப்பதில்லை. இந்த விடயத்திலும் விவசாயத் திணைக்களம் கவனம் செலுத்த வேண்டும்.-என்றார். (ச)

காலைக்கதிர்
Kalaikkathir



# தென்மராட்சிப் பிரதேச பண்பாட்டு பெருவிழா

தென்மாரட்சி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி ஸ்ரீ விநாயக மணிமண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணமும், கௌரவ விருந்தினர்களாக சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன், நா.நல்லதம்பி ஆகியோரும் கலந்து கொள்வர். நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், புனிதலிகோரியா ஆலய பங்குத் தந்தை வண. யோ.பிரான்சிஸ் அடிகளார் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் நாடகம், இன்னிசை மாலை, உடுக்கிசை என்பனவும் 'கலைச் சாகரம் விழுது' கைந்நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன. (ஐ-22)

# எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி




தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 29 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

எம்.ஜி.ஆர். ரசிகரும் கல்வியங்காட்டில் எம்.ஜி.ஆரின் சிலையை அமைத்தவருமான கோப்பாயைச் சேர்ந்த எஸ். சுந்தரலிங்கம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வில் எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-23)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பணிகள் முடிவுறும் தறுவாயிலில்



தென்மராட்சி, டிசெ.26

தென்மராட்சியில் வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களின் வீட்டுப் பணிகள் தற்பொழுது நிறைவு பெறும் தறுவாயிலில் காணப்படுகின்றன.

சிலர் வீட்டுத் திட்ட பணிகளைப் பூர்த்தி செய்து புகுமனைப் புகு விழாவைக் கொண்டாடியுள்ளனர். ஏனையோர் பணிகளைத் தொடர்ந்த மேற்கொண்டு வருகின்றனர்.

பணிகளை நிறைவு செய்த வீடுகளைக் கிராம அலுவலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு புகைப்படம் எடுத்து அதனை பிரதேச செயலகத்திடம் கையளிக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

பல வீடுகளில் கதவு போடுதல், வெள்ளை அடித்தல் போன்ற ஒரு சில பணிகளை மாத்திரம் செய்து முடிக்க வேண்டிய நிலை உள்ளது.

பணிகளை நிறைவு செய்த பயனாளிகள் வீட்டுக்கு மின்னிணைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

''எமக்கு அரசால் தரப்பட்ட ஏழு லட்சத்து எண்பதாயிரம் ரூபாவை விட மேலும் மூன்று லட்சம் ரூபாவரை செலவாகியுள்ளது. இதற்காக சில பயனாளிகள் மீற்றர் வட்டிக்குப்பணம்வேண்டி, நகை அடகு வைத்து வீட்டுப் பணிகளை செய்து வருகிறார்கள். வீட்டுத் திட்டப் பணிகள் அமோகமாக நடைபெற்று வருவகின்றமையால் மண், கல், மரம், ஓடு போன்ற மூலப் பொருள்களின் விலைகளும் கூலியும் அதிகரித்துள்ளன.''-என்று பணிகளைநிறைவுசெய்த பயனாளிகள் கூறினர். (ஐ-21)

# தனியார் ஊடகங்களை ஒதுக்க பொலிஸ்மா அதிபர் முடிவு

தனியார் ஊடகங்களுக்கு மின்னஞ்சல் ஊடாக பொலிஸ் செய்திகளை அனுப்பும் செயற்பாட்டை இடை நிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

புதன்கிழமை முதல்இந்தநடைமுறை அமுலுக்கு வருவதாக பொலிஸ் தலைமையகத்தின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் செய்திகள் தொடர்பான புதிய தகவல்கள் அரசநிறு வணங்களுக்கு மாத்திரமே அனுப்புமாறும் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பொலிஸ் மா அதிபர் உரையாற்றிக் கொண்டிருந்த போது பொலிஸ் மா அதிபர் தமக்கு வந்த தொலைபேசி அழைப்புக்குப் பதில் கூறுகின்றமையை தனியார் தொலைக் காட்சி ஒன்று அப்படியே ஒளிபரப்பியது. அது தொடர்பிலான சர்ச்சையை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறும் எந்தவொரு நிகழ்வுக்கும் தனியார் ஊடகங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டாம் எனவும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளாராம்.

இந்த விடயம் தொடர்பில் தமக்கு கீழுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரன்மால் கொடித்துவக்கு உள்ளிட்ட பல்வேறு பொலிஸ் அதிகாரிகளு டன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து பொலிஸ் மா அதிபர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.



சுனாமி அனர்த்தத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூரும் வகையில் உடுத்துறையில் சுனாமிச் சதுக்கத்தில் மக்கள் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் கல்லறைகளுக்கு வர்ணம் பூசுவதிலும் ஆர்வம் காட்டினர். (ஐ-35)

பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின்

# ஊடகங்கள் குறித்த தீர்மானத்துக்கு சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பு

கொழும்பு,டிசெ.26

தனியார் ஊடகங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர எடுத்துள்ள தீர்மானத்துக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தனியார் ஊடகங்களுக்கு நாளாந்தம் தகவல்களை வழங்கும் நடவடிக்கைகளை ரத்து செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையானது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல என்று சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், தனியார் துறை ஊடகங்களுக்கு எதிரான, பொலிஸ் மா அதிபரின் தீர்மானம் முட்டாள் தனமானது என்று சிரேஷ்ட ஊடகவியலாளர் குசால் பெரேராவும் குற்றம் சுமத்தி யுள்ளார்.

ஒரு தனியார் ஊடகத்தின்செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அனைத்து தனியார் ஊடகங்களின் மீதும் கட்டுப்பாடுகளை விதிப்பது நியாயமற்றது என்று இணைய ஊடக அமைப்புக்களும் சுட்டிக் காட்டியுள்ளன என்பதுடன் இது ஊடக சுதந்திரத்தை மீறும் செயற்பாடு என்றும் தெரிவித்துள்ளன. (ஐ)

## மழை பொழிய சமய வழிபாடுகளில் ஈடுபட ஜனாதிபதி வேண்டுகோள்

நாட்டில் போதிய அளவில் மழை பெய்வதற்கு, சமய வழிபாடுகளில் ஈடுபடுமாறு நாட்டுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நீர்கொழும்பில் நடைபெற்ற நத்தார் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டாவாறு அழைப்பை விடுத்தார்.

நாடளாவிய மட்டத்தில், பௌத்த மத பூஜைகளை நடத்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

போதிய மழை பெய்யாததால், நாடளாவிய மட்டத்தில் தண்ணீர் தேக்கங்கள் வற்றிவிட்டன என்றும், மக்களின் பிரார்த்தனைகள் ஊடாகவே அதனை மாற்ற இயலும் என்றும் அவர் தெரிவித்தார்.மேற்படி நிகழ்வில் கிறிஸ்தவ தலைவரான பேராயர் கார்டினர் மல்கம் ரஞ்சித்தும் பங்குபற்றினார்.கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் விழாவில் கலந்து கொண்டார்.

## ஊடகவியலாளர் நிலாந்தனிடம் மீண்டும் விசாரணை

சுயாதீன ஊடகவியலாளரும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளருமான செல்வக்குமார் நிலாந்தனிடம் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி நிலாந்தனால் ஊடகங்களுக்கு எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் தனக்கு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நிலாந்தனை மட்டக்களப்பு பொலிஸார் அழைத்து விசாரணைகள் மேற்கொண்டனர். அத்துடன் வாக்குமூலங்களையும் பதிவு செய்திருந்தனர்.

விசாரணையை மட்டக்களப்பு பொலிஸார் சரியாக மேற்கொள்ளவில்லை என மாவட்ட அரச அதிபர் பி.எஸ். எம். சார்ள்ஸ் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தார். இதன் பிரகாரம் ஊடகவியலாளர் நிலாந்தன் நேற்றுமுன்தினம் மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவரிடம்வாக்குமூலமும் பெறப்பட்டது.

# பெற்றோரை இழந்த சிறுவருக்காக சிறுவர் சிநேக குடும்பத் திட்டம்

வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது








வவுனியா, டிசெ.26

பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கென ‘சிறுவர் சிநேக குடும்பம்’ என்னும் தொனிப்பொருளில் திட்டம் ஒன்று வவுனியா பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


இந்தத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜே.கென்னடி தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் மதவு வைத்தகுளம், அண்ணாநகர் மற்றும் அரபாநகர் ஆகிய மூன்று கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 120 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.தந்தை அல்லது தாயை அல்லது இரண்டு பேரையும் இழந்தபாடசாலைமாணவர்களுக்கே இந்த நிகழ்வில் வைத்து உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.விமலன் இதற்கான நிதியுதவிகளை வழங்கியிருந்தார்.

இந்த மாணவர்கள் தமது பாடசாலை மற்றும் பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கும் வரை தொடர்ச்சியாக சிறுவர் அபிவிருத்தி லங்கா நிறுவனத்தால் கற்றலுக்கான உதவிகள் மாதாந்தம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)




## உணவுப் பார்சல்கள் விலை வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியாவில் உணவுப் பார்சல்களின் விலை அதிகரித்துள்ளது என்று பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அரிசியின் விலை அதிகரித்துள்ளதால் உணவுப் பார்சல்களின் விலை 10 ரூபாவால் அதிகரித்துள்ளது என உணவகங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை அகில இலங்கை சிற்றுண்டி உணவக உரிமையாளர் சங்கம் வெளியிட்டுள்ளது. (ஐ-100)



## சாஸ்திரி கூழாங்குளம் வீதி குப்பையால் நிறைந்து வழிகிறது

வவுனியா, டிசெ.26

வவுனியா நகரசபை எல்லைக்கு உட்பட்ட தாண்டிக்குளத்தில் இருந்து சாஸ்திரி கூழாங்குளம் செல்லும் வீதியோரத்தில் கழிவுகள், குப்பைகள் கொட்டப்பட்டுள்ளமையால் போக்குவரத்துச் செய்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாண்டிக்குளம் - சாஸ்திரிகூழாங்குளம்வீதியில் காணப்படும் நீர் பாய்ந்து ஓடும் பகுதியில் வீட்டுக் கழிவுகள், குப்பைகள் கொட்டப்பட்டு அவை குப்பை மேடாகக் காட்சியளிக்கின்றன. தற்போது அந்தப் பகுதியில் கழிவுகள் நிரம்பி துர்நாற்றம் வீசத் தொடங்கியுள்ளது. அத்துடன் விலங்குகள் கழிவுகளை மக்கள் குடியிருப்புக்களுக்குள் எடுத்துச் செல்கின்றன என்றும் இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா நகரசபை உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.(ஐ-100)

## மல்லாவி சிவன்கோவில் நாள்காட்டி வெளியீடு






மல்லாவி சிவன்கோவில் கட்டட நிதிக்காக 2017 ஆம் ஆண்டுக்கான நாள்காட்டி வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா கலந்து கொண்டார். இதன்போது அங்கு நடைபெற்றுவரும் அறநெறி பாடசாலைக்கான நந்திக் கொடியை துணுக்காய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் அவர் கையளித்தார். (ச- 81)

# நாட்டில் அமைதி நிலைக்க இறைவனிடம் கையேந்துங்கள்!

## ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை கிறிஸ்மஸ் திருப்பலி நிகழ்வில் தெரிவிப்பு





மன்னார், டிசெ.26

அமைதி, மகிழ்ச்சிக்காக உதித்த இறைவனிடம் நாட்டில் அமைதி நிலைக்க தொடர்ந்தும் கையேந்துங்கள்.

இந்த நாட்டில் அமைதி, சமாதானம் மலர வேண்டும். இந்த அரசு நல்லாட்சியைக் கொண்டு வந்தபோதும் இன்னும் இதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. பிறந்திருக்கும் அமைதியில் இறைவனை நோக்கி நாம் தொடர்ந்து கையேந்துவோம்.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் யோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை கிறிஸ்மஸ் விழா திருப்பலியின்போது பக்தர்கள் மத்தியில் தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் விழாவின் நள்ளிரவு திருப்பலியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் யோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மன்னார் பேராலயத்தில் ஒப்புக் கொடுத்தார். தொடர்ந்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் மத்தியில் மறையுரையாற்றினார்.

இந்த உரையின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பெருவிழாவை முன்னிட்டு கிராமங்கள் தோறும் வியாபாரங்களும் இதற்கான விளம்பரங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு இறையேசுவின் திருவருகைக்காக நாமும் இறைவழிபாட்டில் ஆயத்தப்படுத்திய நிலையில் இறையேசுவின் இந்தப் பிறப்பு மீண்டும் எமக்கு ஒரு மகிழ்ச்சி நிறைந்ததாக அமைகின்றது.

இந்த மகிழ்ச்சி வெளி ஆடம்பரங்களில் இருக்காது. இறைவனின் கருணை, அவரின் அன்புடன் நாமும் இரண்டறக் கலந்து, அவருடன் நாம் வாழ்வதற்கும் பேருபெற்றவர்களாக இருக்கின்றோம்.

நமக்கு ஒரு மீட்பர் பிறந்திருக்கின்றார். இவர்தான் மெசியா. நமது மீட்புக்காக இவர் பிறந்திருக்கின்றார். ஆகவே நாம் எமது வாழ்வை ஒரு கணம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நாம் இறைவனுக்கு நன்றிகூற வேண்டும். இதற்கு நாம் அவருக்கு கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இறைவன் எமக்கு மீட்புத் தரவேண்டுமானால் அவருடைய போதனைகளைப் பின்பற்ற வேண்டும் . யேசு ஓர் இறைமகன். அவரை மீட்பர் மெசியா என வரவேற்று இன்று மகிழ்ச்சியில் இருக்கின்றோம். கண்ணுக்குத் தெரியாத இறைவன் கண்ணுக்கு புலப்படக் கூடிய மனிதத் தன்மையில் பிறந்திருப்பதை நாம் விசுவாசிக்கின்றோம்.

நமது நாட்டிலோ, சமூகத்திலோ அல்லது குடும்பத்திலோ சரி நாம் அமைதிக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அமைதி வரும் அல்லது போகும் அல்லது இந்த அமைதியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும் என்ற நிலையில்தான் நாம் இறைவனை நோக்கி அமைதிக்காக வேண்டி நிற்கின்றோம்.

ஆகவே,இந்த அமைதி கிடைக்கப்பெற வேண்டுமானால் தீயவற்றை விட்டு விலகுங்கள், இறைவனுக்கு ஏற்றவர்களாக வாழுங்கள் என கேட்டுக் கொள்கின்றேன். இறைவனுடன் நாம் வாழும்போதுதான் நமது உள்ளத்திலும் வீட்டிலும் நாட்டிலும் இந்த அமைதி உருவாகும்.- என்றார். (ஐ-112)

■அ.ச.அரியகுமார்



# 12 வருடங்கள் கடந்தன வடுக்கள் ஆறவில்லை

டிசெம்பர் மாதம் அனைத்து மத மக்களுக்கும் முக்கியமான மாதம். அந்த மாதத்தில் வருகின்ற விடுமுறைகளும் மத அனுஷ்டான நிகழ்வுகளும் மக்களைக் குதூகலிப்போடு பிறக்கப் போகும் புது வருடத்தின் எதிர்பார்ப்புகளைத் திட்டமிடும் காலம்.

மக்களின் இரட்சிப்புக்காகப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகம் முழுவதும் கொண்டாடிய மறுநாள் 2004 டிசெம்பர் 26 ஆம் நாள் தெற்கு, தென் கிழக்காசிய நாடுகளை உலுக்கிப் போட்ட அந்த நிகழ்வு இடம்பெற்றது.

சுமத்திரா தீவின் வட மேல் ஆழ்கடலில் ஏற்பட்ட புவி நடுக்கத்தால் பொங்கியெழுந்த பேரலை இந்து சமுத்திரத்தின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கி 2 லட்சத்து 50 ஆயிரத்து 676 இற்கும் மேற்பட்ட மக்களைக் காவு கொண்டது.

இந்த சுனாமி அனர்த்தத்தால் இலங்கையின் பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. மக்களின் உயிர்கள் சில நிமிட நேரங்களில் பறிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் காயப்பட்டார்கள்.




வீடுகள், சொத்துக்கள் முற்றாக அழிவடைந்தன. உத்தியோகபூர்வ தகவலின்படி 30 ஆயிரத்து 977 பேர் சுனா மியின் கோரப்பிடியில் சிக் குண்டு பரிதாபமாக உயிரிழந்தனர். குழந்தைகள் உட்பட 5 ஆயிரத்து 644 பேர் காணாமற்போயுள்ளனர். 15 ஆயிரத்து 197 பேர் உடல் ஊனமுற்றுள்ளனர் அல்லது பாதிப்புக்களுக்கு உள்ளாகினர். மக்களின் 78 ஆயிரத்து 387 வீடுகள் முற்றாக அழிவடைந்தன. 60 ஆயிரத்து 197 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

கரையோரப் பிரதேசத்தில் காணப்பட்ட 161 பாடசாலைகள் முற்றாக அழிவடைந்தன. 59 பாடசாலைகள் பகுதியளவில் சேதமடைந்தன. கடற்றொழிலாளர்களின் மீன்பிடி கலங்கள், வலைகள் கடல் அலையால் அள்ளுண்டு போயின. விவசாய நிலங்களில் கடல் நீர் புகுந்ததால் பாதிப்படைந்தன.

இலங்கையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், களுத்துறை, மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகிய மாவட்டங்களின் சில கரையோரப் பகுதிகள் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகின.

வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் 25 ஆண்டுகளாகக் கொடிய யுத்தத்தால் உயிர் இழப்பு, சொத்து இழப்பு, இடப்பெயர்வு ஆகியவற்றைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வந்தார்கள். 2002 இல் ரணிலுக்கும் புலிகளுக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட பேச்சு காரணமாக சில இடங் களில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

இந்நிலையில் தான் ஆழிப்பேரலை அனர்த்தம் ''மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போல'' எமது மக்களைத் துவம்சம் செய்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பேரலை அனர்த்தத்தால் ஆயிரத்து 256 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 902 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 984 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 975 பேரும் காவு கொள்ளப்பட்டனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எமது மக்களுக்கான நிவாரணப் பணிகளைச் சர்வதேச நாடுகள் செய்வதற்கு முண்டியடித்து முன் வந்தபோதிலும் அவை முற்றாக நிறைவு செய்யப்படவில்லை. ஆழிப்பேரலையால் பெரும் பாதிப்புக்கு உள்ளான மக்கள் மீண்டு எழுவதற்கு அரசு சந்தர்ப்பமோ, அவகாசமோ கொடுக்கவில்லை. போர் மீண்டும் தொடங்கப்பட்ட நிலையில் வடக்கு, கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடத்திலிருந்து துரத்தப்பட்டு அகதிகளாக்கப்பட்டார்கள். வீடுகள் உட்பட அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகள், நிவாரணங்கள் எதுவுமே கைக்கு எட்டாமல் போயுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் பெரும் இழப்புக்களைச் சந்தித்தது. அப்பிரதேசத்தில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள கரையோரப் பிரதேசங்களை முற்றாக அழிவைச் சந்தித்தன.

இந்தப் பிரதேசத்தில் பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட 1002 பேர் ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டனர். 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள்.

> ‘சுனாமி வீட்டுத் திட்டம் கைவிடப்பட்டு கடும் நிபந்தனையுடன் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்ததால் மேலதிகமான பணத்தை வீடு கட்டுவதற்குச் செலவழித்து கடனாளிகளாக நிற்க வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.’

சுமார் 4ஆயிரம் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்ட மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டு கட்டைக்காடு, உடுத்துறை, தாளையடி, செம்பியன் பற்று, மணற்காடு ஆகிய இடங்களில் அடக்கம் செய்யப்பட்டனர். உடுத்துறையில் அமைந்துள்ள ஆழிப்பேரலை நினைவாலயத்தில் அப் பகுதியைச் சேர்ந்த 782 பேரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் கடந்த 11 ஆண்டுகளாக ஆழிப்பேரலை அனர்த்த நினைவு தின நிகழ்வுகள் மக்களால் உருக்கமான முறையில் நினைவு கூரப்பட்டு வருகின்றன. உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட ஏனைய இடங்களிலும் நினைவு தின நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் வடமராட்சி கிழக்கு மக்கள் தமது வாழ்விடங்களை முற்றாக இழந்த போதிலும் அவர்களுக்கான சுனாமி வீட்டுத்திட்டங்கள் இதுவரை எவருக்குமே கிடைக்கவில்லை.

நிவாரணம் வழங்குவதற்கு பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் முன்வந்த போதிலும் மீண்டும் போர் தொடங்கியமையையடுத்து அம்மக்கள் தமது பிரதேசத்திலிருந்து வெளியேறி அகதிகளாக வேண்டிய துர்ப்பாக்கிய நில்ல ஏற்பட்டது.

போர் மௌனித்த பின்னர் - 2010ஆம் ஆண்டு அந்தப் பிரதேச மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டபோது சுனாமி வீட்டுத் திட்டம் கைவிடப்பட்டு கடும் நிபந்தனையுடன் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்தமையால் மேலதிகமான பணத்தை வீடு கட்டுவதற்குச் செலவழித்து கடனாளிகளாக நிற்கவேண்டிய நிலை அந்தப் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

56 கிலோ மீற்றர் நீளமான கரையோரத்தைக் கொண்ட வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உடுத்துறையில் மட்டுமே சுனாமி எச்சரிக்கை மையம் அமைக்கப்பட்டு கருவி பொருத்தப்பட்டுள்ளது. நீளமான கரையோரத்தைக் கொண்ட வடமராட்சி கிழக்குக்கு ஓர் இடத்தில் மட்டும் சுனாமி எச்சரிக்கை மையத்தை அமைப்பது அப்பிரதேச முழு மக்களுக்கும் பாதுகாப்பாக அமைய மாட்டாது.

முன்பு முழு வடமராட்சியின் தேங்காய் தேவையைப் பூர்த்திசெய்வதில் வடமராட்சி கிழக்கு பெரும் பங்காற்றியது.

ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னால் வடமராட்சி கிழக்கு கரையோரத்தில் காணப்பட்ட தென்னைகள் முற்றாக அழிவடைந்துள்ளன.

அக்கரையோரப் பிரதேசத்தில் மக்களின் காணிகளில் தென்னை மீள் நடுகைக்கான நடவடிக்கைகளைக் காலம் தாழ்த்தாது மேற்கொள்வது அவசியமானதாகும். ★






பொன்.வேணு கிருஷ்ணா

### ரஷ்யாவின் ஊடுருவல்: ட்ரம்ப் - சி.ஐ. ஏ மோதல்!

கடந்த சில வாரங்களாக (2016 நவம்பர், டிசெம்பர் மாதங்களில்) அமெரிக்க ஆளும் உயரடுக்குக்குள்ளாக, ரஷ்யாவை மையமாகக் கொண்டு, வெளியுறவுக் கொள்கை விடயத்திலான ஒரு மோதல் பகிரங்கமான பதிலடி வாதங்களாய் வெடித்திருக்கிறது. குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்படும் நோக்கத்துடன் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலைக் குறிவைத்து ‘ரஷ்யாவின் ஊடுருவல்’ நடைபெற்றிருந்ததாக பெருநிறுவனக் கட்டுப்பாட்டிலான ஊடகங்களில் அதிகரித்த வெறிகொண்ட கூற்றுகளின் வடிவத்தை அது எடுத்திருக்கிறது.

வெள்ளியன்று இரவு (09.12.2016) வாஷிங்டன் போஸ்டிலும் சனிக்கிழமை(10.12.2016) நியூயோர்க் டைம்ஸிலும் வந்த அடுத்தடுத்த கட்டுரைகளால் இந்தப் பிரசாரம் தூண்டப்பட்டிருந்தது. ரஷ்ய அரசாங்கம் ட்ரம்ப் ஜனாதிபதி பதவியை வெல்வதில் உதவ முயன்றமை ஒரு புதிய இரகசிய சிஐஏ மதிப்பீடு கண்டறிந்திருந்ததாக இக்கட்டுரைகள் கூறின. இதுவே பின்னர் பகிரங்கமாய் வெளியிடுவதற்காக விக்கிலீக்ஸுக்கு வழங்கப்பட்டிருந்த ஜனநாயகக் கட்சியின் தேசியக் குழு மற்றும் கிளிண்டன் பிரச்சாரத்தில் இருந்ததான மின்னஞ்சல்கள் ஆகும் எனவும் ஊடுருவல் செய்யப்பட்டிருந்ததன் நோக்கமும் அதுவே எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.




The CIA has concluded in a secret assessment that Russia intervened in the 2016 election to help Donald Trump win the presidency, rather than just to undermine confidence in the U.S. electoral system, according to officials briefed on the matter.

Intelligence agencies have identified individuals with connections to the Russian government who provided WikiLeaks with thousands of hacked emails from the Democratic National Committee and others, including Hillary Clinton's campaign chairman, according to U.S. officials. Those officials described the individuals as actors known to the intelligence community and part of a wider Russian operation to boost Trump and hurt Clinton's chances.

“It is the assessment of the intelligence community that Russia's goal here was to favor one candidate over the other, to help Trump get elected,” said a senior U.S. official briefed on an intelligence presentation made to U.S. senators. “That's the consensus view.”

[FBI and CIA give differing accounts to lawmakers on Russia's motives in 2016 hacks]

The Obama administration has been debating for months how to respond to the alleged Russian intrusions, with White House officials concerned about escalating tensions with Moscow and being accused of trying to boost Clinton's campaign.

In September, during a secret briefing for congressional leaders, Senate Majority Leader Mitch McConnell (R-Ky.) voiced doubts about the veracity of the intelligence, according to officials present.

The Trump transition team dismissed the findings in a short statement issued Friday evening. “These are the same people that said Saddam Hussein had weapons of mass destruction. The election ended a long time ago in one of the biggest Electoral College victories in history. It's now time to move on and ‘Make America Great Again,’” the statement read.


Trump has consistently dismissed the intelligence community's findings about Russian hacking.

“I don't believe they interfered” in the election, he told Time magazine this week. The hacking, he said, “could be Russia. And it could be China. And it could be some guy in his home in New Jersey.”

The CIA shared its latest assessment with key senators in a closed-door briefing on Capitol Hill last week, in which agency officials cited a growing body of intelligence from multiple sources. Agency briefers told the senators it was now “quite clear” that electing Trump was Russia's goal, according to the officials, who spoke on the condition of anonymity to discuss intelligence matters.

### குடியரசுக் கட்சி சார்பான மின்னஞ்சல்களை வெளியிடவில்லை

ட்ரம்ப்புக்கு ரஷ்யா ஆதரவாகச் செயல்பட்டது என்பதற்கான ஆதாரமாக, ஊடுருவல்காரர்கள் குடியரசுக் கட்சியின் தேசியக் குழுவின் கணக்குகளிலும் கூட ஊடுருவி விட்டிருந்தனர், ஆனாலும் குடியரசுக் கட்சி சார்பான மின்னஞ்சல்களை வெளியிடவில்லை. ஏனென்றால் அவர்களின் நோக்கம் கிளிண்டனை மதிப்பிழக்கச் செய்வதாக இருந்ததே தவிர ட்ரம்பை மதிப்பிழக்கச் செய்வதல்ல என்பதான கூற்றை டைம்ஸ் முன்வைத்தது. இந்தச் செய்தியை குடியரசுக் கட்சியின் தேசியக் கமிட்டித் தலைவரான ரெய்ன்ஸ் ப்ரீபஸ் - வரவிருக்கும் ட்ரம்ப்பின் வெள்ளை மாளிகை நிர்வாகத்தில் ஊழியர்களின் தலைவராக இவரே அறிவிக்கப்பட்டிருக்கிறார் முற்றிலும் மறுத்திருக்கிறார்.






ட்ரம்ப் ஞாயிறன்று (11.12.2016) ஃபாக்ஸ்நியூஸ் தொலைக்காட்சியில் தோன்றி, ரஷ்ய தலையீடு குறித்த செய்திகளை, ஜனநாயகக் கட்சியினர் தங்களது தேர்தல் தோல்வியை விளக்குவதற்காகப் பயன்படுத்தும் புளித்த திராட்சை கதை என்று கூறி கண்டனம் செய்தார். ‘இது அபத்தமானதாகக் கருதுகிறேன்’ என்றார் அவர். ‘இது இன்னொரு நொண்டிச்சாக்கு என்று நான் நினைக்கிறேன். என்னால் நம்பமுடியவில்லை... ஜனநாயகக் கட்சியினர் நாட்டின் அரசியல் வரலாற்றின் மிகப்பெரும் தோல்விகளில் ஒன்றைக் கண்டிக்கின்றமையால் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.’

அமெரிக்க ஆளும் உயரடுக்குக்குள்ளாக இருக்கும் பிளவுகளின் தீவிரமானது, ‘இதே ஆட்கள் தான் சதாம் உசைனிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறினர்’ என்று நக்கலாகக் குறிப்பிட்டு, சி.ஐ.ஏ இன் மதிப்பீடாகச் சொல்லப்படுவதற்கு ட்ரம்ப் இடைமருவல் அணி அளித்த ஆரம்ப பதிலிறுப்பில் எடுத்துக்காட்டப்படுகிறது.

The Intercept இல் கிளென் கிரீன் வால்ட் குறிப்பிட்டவாறாக: ‘இந்த கூற்றுகளில் எதற்கும் அத்தகைய ஆதாரம் ஏதுமில்லை. அதற்குப் பதிலாய், பெயர்கூறப்படாத மனிதர்களால், நிரூபணம் கூட வேண்டாம்இ எந்த ஆதாரமும் கூட முற்றிலும் இல்லாமல் பரப்பப்படுகின்ற திட்டவட்டங்கள் மட்டுமே நம்மிடம் இருக்கின்றன. அதனால், ஆதாரமாகக் கூறப்படும் எதனையும் பொதுவில் பார்க்க முடியவில்லை, திறனாய்வு செய்ய முடியவில்லை, அல்லது விவாதிக்க முடியவில்லை. சி.ஐ.ஏ. என்ன நம்புகிறது என்பதாக பத்திரிகைகளுக்கு கசியவிடப்படும் விலாசமில்லாத கூற்றுகள் எல்லாம் நிரூபணமாகி விடாது. அத்துடன் திறனாய்வு செய்யத்தக்க உண்மையான ஆதாரத்துக்காய் பிரதியிடத்தக்க நம்பத்தகுந்த ஆதாரமாகவும் இது ஆகி விடாது.’




### ரஷ்யா ஊடுருவல் செய்ததாக கூறப்பட்ட பிரசாரத்துக்கான உடனடியான நோக்கம்

பேர்னி சாண்டர்ஸின் முதனிலைத் தேர்தலுக்கான பிரசாரத்தைப் பலவீனப்படுத்துவதற்கு கிளிண்டன் பிரசாரத்திற்கும் ஜனநாயகக் கட்சியின் தேசிய கமிட்டிக்கும் இடையில் நடந்த ஒரு சதியை ஆவணப்படுத்துகிற கசிந்த மின்னஞ்சல்களின் உள்ளடக்கத்தில் இருந்து கவனத்தை திசைதிருப்புவது தான், ஜூலையில் நடந்த ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தெரிவு மாநாட்டின் சமயத்தில் கிளிண்டனாலும் ஜனநாயகக் கட்சியாலும் ரஷ்யா ஊடுருவல் செய்ததாக கூறப்பட்ட பிரசாரத்துக்கான உடனடியான நோக்கமாக இருந்தது.

### யார் , யார் யாருக்காக?

ஆயினும், ஹேக்கிங் குற்றச்சாட்டுகள் குறித்த பகிரங்க மோதலின் பின்னால் வெளியுறவுக் கொள்கை குறித்த ஓர் ஆவேச மோதல் இருக்கிறது என்பது இப்போது தெளிவாகிறது. ஆளும் வர்க்கத்துக்குள்ளாக, சீனாவுக்கு எதிரான ஒரு கூடுதல் மூர்க்கமான இராணுவ, பொருளாதார மற்றும் இராஜதந்திரத் தாக்குதலை முன்னெடுக்கக் கூடிய



ஓர் அமெரிக்கக் கொள்கை மீது கவனம் குவிக்க விரும்பும் ஒரு கன்னைக்காக ட்ரம்ப் பேசுகிறார். ரஷ்யாவை நோக்கிய மூர்க்கமான மற்றும் மோதல் நிரம்பிய நிலைப்பாட்டில் இருந்து எந்த மாற்றத்தையும் எதிர்க்கின்ற உளவு ஸ்தாபகம் மற்றும் இராணுவத்தின் ஒரு கன்னைக்காக ஜனநாயகக் கட்சியினரும் மற்றும் நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வாஷிங்டன் போஸ்ட் போன்ற முன்னணி ஊடக நிறுவனங்களும் பேசுகின்றனர்.

### ‘அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யாவின் கை’




டைம்ஸில் ஞாயிறு(11.12.2016) இரவு பதிவிடப்பட்ட ‘அமெரிக்கத் தேர்தலில் ரஷ்யாவின் கை’ என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையில் இது அடிக்கோடிடப்பட்டது. ட்ரம்ப்பின் தேர்தல் பிரசாரத்துக்கு ஆதரவாக ரஷ்யா ஊடுருவல் செய்ததாக எந்த ஆதாரத்தையும் வழங்காமல் டைம்ஸ் மீண்டும் தெரிவிக்கிறது. தான் தேர்ந்தெடுக்கப்பட்டால், ‘சிரிய உள்நாட்டுப் போரில் இழைத்த போர்க் குற்றங்களுக்காகவும் உக்ரைன் மற்றும் மற்றைய அண்டை நாடுகளிடத்திலான மூர்க்கத்தனத்துக்காகவும் ரஷ்யாவை தண்டிப்பதற்கும் தனிமைப்படுத்துவதற்குமான முயற்சிகளை இரட்டிப்பாக்க’ இருப்பதாக உறுதிபூண்டமைக்காக ஹிலாரி கிளிண்டனை அது பாராட்டியது. கிளிண்டன் வென்றிருந்தால், ரஷ்யாவுடன் ஒரு போரைத் தூண்டுவதுதான் அவரது முதல் நடவடிக்கையாக இருந்திருக்கும் என்றும், அதற்கு டைம்ஸின் உற்சாகமான ஆதரவு கிட்டியிருக்கும் என்றுமான முடிவுக்கு ஒருவர் வரலாம்.

### ‘உண்மையில் இத்தேர்தல் முறைகேடு நடந்திருந்த ஒன்று தான்’

அசாதாரண மொழியைப் பயன்படுத்திஇ இந்தத் தலையங்கம் தொடர்ந்து எழுதுகிறது: ‘தன்னைச் சுற்றிலும் கிரெம்ளின் எடுபிடிகளை சூழக் கொண்டிருந்த ஒரு வளைத்துவிடத்தக்க அரசியல் கத்துக்குட்டியை ட்ரம்பில் ரஷ்யர்கள் காண்பதற்கான காரணம் இருந்தது.’ ரஷ்யத் தலையீட்டின் விளைவாக ‘உண்மையில் இத்தேர்தல் முறைகேடு நடந்திருந்த ஒன்று தான்’ என்று சூசகம் செய்வதுடன் அது முடிகிறது.

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



07

## தமிழ் இளைஞரின் அரசியல் வன்முறை

நடைமுறைச் சாத்தியமான ஒரு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய அவசியத்தை தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைமைப்பீடம் உணர்ந்திருந்தது. ஆனால், தலைவைர்களிடையே நிலவிய கருத்து பேதம், நடைமுறைச் செயற்றிட்டம் ஒன்றை உருவாக்குவதற்குத் தடையாக நின்றது. தமிழினத்தின் சார்பாக யாப்பமைப்பு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகள் எடுத்த எடுப்பிலேயே தூக்கி வீசப்பட்டமை, தமிழ்த் தலைவர்கள் மத்தியில்ஆழமான ஏமாற்றத்தைத் தோற்றுவித்தது. அரச ஆட்சியில் தமிழ் மக்கள் அர்த்தபூர்வமாகப் பங்கெடுப்பதற்கு முற்றுமுழுதான தடை ஒன்று உருவாகி இருப்பதை இது அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அரசியலில் தமிழர் முற்று முழுதாக ஓரம் கட்டப்படுகின்றமையையும் அது முகத்தில் அறைந்தாற்போல் உணர்த்தியது. எனவே, தமிழினத்தின் அரசியல் எதிர்காலம் பேராபத்துக்கு உள்ளாகி இருப்பதை தமிழ்த் தலைவர்கள் உணரவே செய்தார்கள். ஆனால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவல்ல நடைமுறைச் செயற்றிட்டம் ஒன்றை வகுக்க அவர்களால் இயலவில்லை. திருகோணமலை மாநாட்டிலே ஆறு அம்சத் திட்டம் ஒன்றை அவர்கள் வகுத்தார்கள். ஆனால், தமிழர் ஐக்கிய முன்னணித் தலைமைப் பீடத்தினரிடம் அரசியல் தூரநோக்கு வரண்டு போய் விட்டதையே அந்த ஆறு அம்சத் திட்டம் அம்பலப்படுத்தியது:

1) தமிழ் மொழிக்கு உரிய திட்டவட்டமான இடம்

2) சிறீலங்கா ஒரு மதச்சார்பற்ற அரசாக இருத்தல்.

3) சிறுபான்மை இனத்தவரின் அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படுவதோடு, சட்ட மூலம் செயற்படுத்தப்படுவதற்கான உறுதிப்பாடு.

4)மனுப் பண்ணும் அனைவருக்கும் குடியுரிமை

5) நிர்வாகப் பரவலாக்கம்

6) சாதி முறை ஒழிப்பு

ஒருபுறம் சிங்கள அரசியல் கட்சிகள் தமது கொள்கை வேறுபாடுகளை மறந்து, ஒரே அணியில் ஒன்றிணைந்து ஒரு கட்டிறுக்கமான சிங்கள – பௌத்த ஏதேச்சாதிகார அரச வடிவமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்க, மறுபுறம் தமிழ்த் தலைவர்கள், தமது ஆரம்ப கால அரசியல் இலட்சியத்தைக் கைவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்காத, அர்த்தமற்ற பூடகமான கோரிக்கைகளை முன்வைக்க முனைந்து கொண்டிருந்தனர்.

தெளிவான அரசியல் தரிசனமும் உருப்படியான செயற்றிட்டமும் இல்லாத காரணத்தால் தமிழ்த் தலைவர்கள் மீது தீவிரவாதத் தமிழ் இளம் சமுதாயம் நம்பிக்கை இழந்தது. எவ்வித பயனுமின்றி, முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் தலைவர்கள் கடைப்பிடித்து வந்த சாத்வீக அரசியல் அணுகுமுறை மீது, அரசியல் விழிப்புணர்வு பெற்ற இளைஞர் சமூகத்துக்கு நம்பிக்கை இடிந்தது. தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணும் வகையில் நடைமுறைச் செயற்றிட்டங்களைக் கொண்ட புரட்சிகரமான அரசியல் அணுகுமுறையையே இளைய தலைமுறை விரும்பியது. ஒருபுறம் ஆயுதப் படைகளின் அடக்குமுறையும் மறுபுறம் அரச இனவாத ஒடுக்குமுறையுமாக ஒரு புரட்சிகரமான புறநிலையை எதிர்கொண்டு நின்ற இளைஞர் சமூகம், காந்திய தத்துவத்தில் நெறிக்கப்பட்ட சாத்வீக அரசியல் வழிமுறையைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டது. தாம் எதிர்கொண்டு நிற்கும் யதார்த்த சூழ்நிலைக்கு சாத்வீகம் நடைமுறைச் சாத்தியமற்று என்பதோடு புரட்சிகரமான அரசியல் அணுகுமுறைக்கு ஏற்றதாக அமையாது என்பதையும் இளைஞர்கள் உணர்ந்து கொண்டார்கள். எழுபதுகளின் முற்பகுதியில் தமிழ் அரசியல் அரங்கில் வெடித்த தமிழ் இளைஞர்களின் அரசியல் வன்முறை, பின்பு காலப்போக்கில் ஒழுங்கமைவான எதிர்ப்பு இயக்கமாக வடிவெடுத்தது. தீவிரவாத இளைஞரின் இந்த அரசியல் வன்முறையானது பழைமைபேண் தமிழ்த் தலைமைக்கும் சரி, சிங்கள ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கும் சரி சிம்ம சொப்பன அரசியல் யதார்த்தமாகத் தோற்றம் எடுத்தது.

மாறி மாறி ஆட்சிப்பீடம் அமர்ந்த சிங்கள அரசுகளின் ஒடுக்கு முறைக் கொள்கைகளுக்கு நேரடியாகப் பலிக்கடாவாக ஆக்கப்பட்ட காரணத்தாலேயே தமிழ் இளைஞர்களிடையே தீவிரவாதக் கடும்போக்கும், வளைந்து கொடாத எதிர்ப்புணர்வும்,வன்முறையும் தலை தூக்கின. படித்த தமிழ் இளைஞர்களிடையே நிலவிய வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக நிரந்தரமான விரக்தியையும் சூன்யமான எதிர்காலத்தையும் அவர்கள் எதிர்கொண்டு நின்றார்கள். அரசாங்கம் வகுத்த பாகுபாடான 'தரப்படுத்தல்' திட்டமும் தனிச் சிங்களச் சட்டமும் தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும் உயர்கல்விக்கான வாயில்களையும் நிரந்தரமாகவே மூடிவிட்டன.

ஒரு புறம் வேலைவாய்ப்பின்மையால் ஏற்பட்ட விரக்தி, மறுபுறம் உயர்கல்வி வாய்ப்பின்மையால் ஏற்பட்ட அங்கலாய்ப்பு, இன்னொருபுறம் அந்நிய மொழித் திணிப்பால் ஏற்பட்ட ஆத்திரம் ஆகியன தமிழ் இளம் சமூகத்துக்கு ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்தப் பாழான நிலையிலிருந்து மீட்சிபெறுவதானால் தமது வாழ்க்கையை முற்றாக மாற்றியமைக்கக் கூடிய ஒரு புரட்சிகரமான அரசியல் நடைமுறையைத் தாம் தழுவ வேண்டும் என அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அரச ஒடுக்குமுறை தீவிரமடைந்து வந்த அந்நெருக்கடியான கால கட்டத்தில் ஆயுதப் போராட்டம் வாயிலாக தமிழ்தேசத்தின் சுதந்திரத்தை வென்றெடுப்பதே தமிழ்மக்களுக்கு எஞ்சியிருந்த ஒரே வழி என அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனவே, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகம் பிரிந்து சென்று தனியரசை நிறுவவேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழர் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் முன்வைக்க வேண்டும் என அவர்களுக்கு நெருக்குவாரம் கொடுத்த புரட்சிகர தமிழ் இளைஞர்கள், தமது தீவிரவாதப் போராட்ட உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அரசியல் வன்முறையில் குதித்தார்கள். 70 களின் முற்பகுதியில் வெளிப்பாடு கண்ட தமிழ் இளைஞரின் அரசியல் வன் முறையை அரச ஒடுக்குமுறைப் பயங்கரவாதத்துக்கு எதிரான தீவிரவாதக் கிளர்ச்சியாகவும், தமிழரின்அரசியல் போராட்ட வடிவங்களில் ஒன்றாகவும் பார்க்கவேண்டும். தமிழ் இளம் சமூகத்தினரிடையே வளர்ச்சிகண்ட தீவிரவாதமும், பொறுமை இழந்த ஆவேசமும், கிளர்ச்சிப் போக்குமே தமிழர் விடுதலை முன்னணியின் அரசியல் சுதந்திரம் என்ற இலட்சியப் பயணத்தைத் துரிதப்படுத்தியது எனலாம்.

தமிழ்அரசியல்வானில்தலைதூக்கிய இளைஞர் வன்முறையின் வரலாற்று மூலத்தைப் பதிவுசெய்யும் போது போராட்ட உணர்வுடைய பெரும்பாலான தீவிரவாத இளைஞர்களை ஊக்குவித்து, வளர்த்து, தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் தோன்றுவதற்கான புறநிலையை உருவாக்கிக் கொடுத்த ஓர் அமைப்பைப் பாராட்டியாக வேண்டும். தமிழ் மாணவர் பேரவையே இந்த அமைப்பாகும். மிகவும் உறுதிப்பாடும் அர்ப்பணிப்புடைய புரட்சிவாத இளைஞர்களை அது உருவாக்கியது. தேச விடுதலை என்ற இலட்சியத்தில் இந்த இளைஞர்கள் கொண்டிருந்த உருக்கை ஒத்த உறுதிப்பாடு ஏனையோருக்கும் ஊக்கத்தைக் கொடுத்து முன்மாதிரியாக அமைந்தது. இந்தப் புரட்சிகரமான மரபிலே தோன்றி , ஒப்பற்ற விடுதலை வீரனாகத் திகழ்ந்து, இறுதியில் தனது உயிரையே தியாகம் செய்த இளைஞர் சிவகுமாரன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவர். சிங்கள அரசின் அதிகாரத்துக்கு அடிபணிய மறுத்து, அரச அடக்கு முறையின் இயந் திரமாகச் செயற்பட்ட காவல் துறையைத் துணிச்சலோடு எதிர்த்துப்போராடிய இந்த இளைஞன்

“ தேச விடுதலை என்ற இலட்சியத்தில் இந்த இளைஞர்கள் கொண்டிருந்த உருக்கை ஒத்த உறுதிப்பாடு ஏனையோருக்கும் ஊக்கத்தைக் கொடுத்து முன்மாதிரியாக அமைந்தது.
இந்தப் புரட்சிகரமான மரபிலே தோன்றி, ஒப்பற்ற விடுதலை வீரனாகத் திகழ்ந்து, இறுதியில் தனது உயிரையே தியாகம் செய்த இளைஞர் சிவகுமாரன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவர். சிங்கள அரசின் அதிகாரத்துக்கு அடிபணிய மறுத்து, அரச அடக்கு முறையின் இயந்திரமாகச் செயற்பட்ட காவல் துறையைத் துணிச்சலோடு எதிர்த்துப்போராடிய இந்த இளைஞன் ஒரு வீர காவியத்தைப் படைத்தான். புரட்சிகர வன்முறை மூலம் சிவகுமாரன் ஏற்றி வைத்த சுதந்திர தீபம் தமிழீழம் எங்கும் அணையாத தீயாகப் பரவியது. ”

ஒரு வீர காவியத்தைப் படைத்தான். புரட்சிகர வன்முறை மூலம் சிவகுமாரன் ஏற்றி வைத்த சுதந்திர தீபம் தமிழீழம் எங்கும் அணை யாத தீயாகப் பரவியது.

குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு, வங்கிக்கொள்ளை, அரசுச் சொத்துடமை மீது தாக்குதல் போன்ற அரசியல் வன்முறைகள் தமிழ்ப் பகுதிகளில் பரவின. வடக்கே வருகை புரிந்த சிங்கள அமைச்சர் ஒருவரின் வாகனம் மீது குண்டு வீசப்பட்டது. குடியரசு அரசியல் யாப்புக்கு ஆதரவு வழங்கி, தமிழ்மக்களின் அபிலாஷைக்கு விரோதமாகச் செயற்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ஆர். தியாகராஜா மீது ப்டுகொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரசுக்கு பேராதரவு வழங்கிக் கொண்டிருந்த குமாரகுலசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார். புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்ட அன்று, தமிழீழம் எங்கும் வன்செயல் சம்பவங்கள் வெடித்தன. பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன. அரச கட்டடங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. சிங்கள தேசியக் கொடிகள் எரிக்கப்பட்டன. அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியாக எழுந்த வன்முறை அலைகளை நசுக்கிவிட முனைந்த அரசு, காவற்றுறையினருக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி பயங்கரவாத ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. சட்டம் வழங்கிய அதிகாரத்தாலும் அரசு வழங்கிய உற்சாகத்தாலும் வீறு கொண்ட காவல் துறையினர் அப்பாவிகளான பொதுமக்கள் மீதும், குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மீதும் கொடூரமான வன்செயலைக் கட்டவிழ்த்து விட்டனர். சித்திரவதை, சிறை, படுகொலை ஆகிய பயங்கரங்களில்காவல்துறையின் கொடுங்கோண்மை தாண்டவமாடியது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் அன்று (1974 ஜனவரி 10 அன்று) இரவு காவல்துறையினர் நடத்திய மிருகத்தனமான தாக்குதலே மிகவும் அருவருப்பான ஆத்திரமூட்டும் செயல் எனக் குறிப்பிடலாம். இந்த மாபெரும் கலாசார நிகழ்வின் போது, தென்னிந்தியாவிலிருந்து வருகை புரிந்த பெரும் கல்விமான் பேராசிரியர் நைனா முகமதுவின் பேருரையை ஏறத்தாழ ஒரு லட்சம் தமிழ் மக்கள் வாய்பிளந்து கேட்டிருக்கும் தருணத்தில், இந்தக் கொடுமை நிகழ்த்தப்பட்டது. நன்கு ஆயுதம் தரித்த நூற்றுக் கணக்கான சிங்களக் காவல்துறையினர், நன்கு வகுக்கப்பட்ட தாக்குதல் திட்டத்தோடு, கண்ணீர் புகைக் குண்டு, குண்டாந்தடி, துப்பாக்கிக் கூர்முனை ஆகியவை சகிதம் பார்வையாளர் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள். சிதறியோடிய மக்களிடையே ஏற்பட்ட குழப்பத்தில் எட்டு உயிர்கள் பலியாகின. பெண்கள்,பிள்ளைகள் அடங்கலாக நூற்றுக் கணக்கானோர் கடும் காயமடைந்தனர். இந்நிகழ்வு தமிழ் இனத்தின் இதயத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது. மக்களின் தேசியப் பெருமைக்குப் பெரும் தலைக் குனிவை உண்டு பண்ணியது. காவல்துறையின் இழிமையான பண்பை இந்த நிகழ்ச்சி வெளிப்படுத்தியது. அரச ஒடுக்குமுறையின் பயங்கரவாதக் கருவியாகவே காவல் துறையினர் தமிழ் மக்களின் கண்ணில் படிந்தனர். சிங்கள இனவாத அரசின் இந்தப் பயங்கவாத வன்முறைக்கு எதிராகத் தமிழ் இளைஞரின் வன்முறைச் செயற்பாடுகள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின்தோற்றம் வளர்ச்சி யுடன் ஒழுங்கமைவான ஆயுத எதிர்ப்பு இயக்கமாகப் பரிமாணம் பெற்றது.

(தொடரும்...)

## அரச அம்புலன்ஸ் சாரதிகள் புதனன்று பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, டிசெ.26

அரச சுகாதார சேவை அம்புலன்ஸ் சாரதிகளின் சங்கம் நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் பரந்தளவிலான வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வடமத்திய மாகாண சுகாதார சேவை சாரதிகள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆதரிக்கும் விதமாக இந்த வேலை நிறுத்தத்தில் அரச சுகாதார சேவை அம்புலன்ஸ் சாரதிகளின் சங்கமும் ஈடுபட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்த வட மத்திய மாகாண சுகாதார சேவை சாரதிகள் 22 ஆம் திகதி முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

வடமத்திய மாகாண சுகாதார சாரதிகள் சேவையை, திணைக்கள சேவையாக மாற்றுமாறு அதிகாரிகளை வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளையில், வடமத்திய மாகாண வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் சேவைக்காக தரைப்படை அதிகாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் குழியில் விழுந்து சாவு

பொலன்னறுவை மாவட்டம் பகமூன, கோணஆர பிரதேசத்தில் இரத்தினக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் அகழ்வுக்காக வெட்டப்பட்ட குழியில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

அந்நபர் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மேலே இருந்த மண்மேடு சரிந்து விழுந்ததால் அவர் மண்ணுக்குள் புதைந்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து ஆபத்தான நிலையில் பகமூன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார். பொல்அத்துவாடிய, அதரகல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சடலம் வைத்தியசா லையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், பகமூன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தினசரி ராசி பலன் 26.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 6.15 - 7.15 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 7.30 - 9.00 |
| குளிகன் | : 1.30 - 3.00 |
| எமகண்டம் | : 10.30 - 12.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** உயர்வு - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் எடுக்கும் அனைத்துக் காரியத்திலும் நிதானம் தேவை.
சந்திராஷ்டமம் : பரணி

**ரிஷபம்:** தடை - உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு காரியத்தில் தடங்கல் ஏற்படும்.

**மிதுனம்:** அன்பு - அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நாள்.

**கடகம்:** பிரீதி நீங்கள் அனைவரிடத்திலும் அனைவரும் உங்களிடம் அன்பு காட்டும் நாள்.

**சிம்மம்:** சுகம் - இன்று மனதில் மகிழ்ச்சி நிறையும் நாள்.

**கன்னி:** நட்பு - நண்பர்களின் அரவணைப்புக் கிடைத்து நலம் நல்கும்.

**துலாம்:** அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி, அமைதி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும்.

**தனுசு:** ஆதரவு - இன்று உறவினர்களாலும், அந்நியர்களாலும் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும்.

**கும்பம்:** சுபம் - நிகழ்வுகள் அனைத்தும் நிம்மதியாக நிறைவு பெறும்.

**மீனம்:** செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நன்னாள்.

# வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பாதுகாப்புக் குறித்து அவதானம்

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.26

வெளிநாட்டுத் தூதரகங்களிலுள்ள இராஜதந்திரிகளின் பாதுகாப்புத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அவதானம் செலுத்திவருகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில இணையத்தளம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

துருக்கியிலுள்ள ரஷ்யத் தூதுவர் சமீபத்தில் படுகொலை செய்யப்பட்டார். அதை அடுத்தே இராஜ தந்திரிகளின் பாதுகாப்புத் தொடர்பில் 'வெளிவிவகார அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய இராஜதந்திரிகளின் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்று வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, 54 நாடுகளிலுள்ள தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகராலயங்களில் இலங்கை இராஜதந்திரிகள் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிவனொளிபாத மலைக்கு போதைப்பொருள் கொண்டுசெல்வதைத் தடுக்க விசேட திட்டம்



கொழும்பு, டிசெ.26

சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருள் கொண்டு செல்வதைத் தடுக்கும் நோக்குடன் விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்திட்டம் ஹட்டன் மோப்ப நாய் பிரிவின் உதவியுடன் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு மவுசாகலை சந்தியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது ஹெரோயின் போதைப்பொருள் 40 மில்லிகிராம் வைத்திருந்த நபர் ஒருவர் மஸ்கெலிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்பின் அவரை ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு பிரதேசங்களிலிருந்து சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களில் ஒரு சிலர் போதைப் பொருள்களைக் கொண்டு செல்கின்றனர் என்று இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே மோப்ப நாய்களின் உதவியுடன் இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சிவனொளிபாத மலை யாத்திரைக்காக வருகை தந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் சோதனை செய்யப்பட்டன. ஹட்டன் பொலிஸாரும், மஸ்கெலிய பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பலநாள் திருடன் அகப்பட்டான்

கொழும்பு, டிசெ.26

மொரட்டுவை லக்ஷபத்திய பகுதியில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்நிலையில் அந்த இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் 3 வீடுகளை உடைத்து கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (எ)

## நுவரெலியாவில் உறை பனி

நுவரெலியா, டிசெ.26

நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களில் அதிகாலையில் உறை பனி நிலை ஏற்படக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நுவரெலியாவில் இரு தினங்கள் அதிகளவான உறை பனி கொட்டியதாக தெரிய வருகிறது. இதேவேளை, நாடு முழுவதும் பல பிரதேசங்களில் மழையுடனான காலநிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. (எ)

# மலையகத்தில் இரு வனப்பகுதிகளில் பல ஏக்கர்கள் தீயில் எரிந்து நாசம்



நுவரெலியா, டிசெ.26

மலையகத்தில் இரு வெவ்வேறு பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத்தீயால் பல ஏக்கர்கள் எரிந்து நாசமாகின.

இந்த நிலையில், நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கப் பகுதியில் உள்ள பாதுகாப்பு வனப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட தீயால் சுமார் 5 இற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் எரிந்து நாசமாகின.

நீரேந்தும் பிரதேச காட்டுப் பகுதியில் இத் தீ ஏற்பட்டதன் காரணமாக நீரூற்றுக்கள் அற்றுப் போகும் அபாயம் உருவாகியுள்ளது. தற்போது நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வரும் நிலையில் மின்சார உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும் நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதியிலும் நீரேந்தும் பிரதேசங்களிலும் இவ்வாறு காடுகளுக்குத் தீ வைப்பதால் எதிர்காலத்தில் நீர் மட்டம் மிக வெகுவாகக் குறைந்து மின் உற்பத்தியையும் பாதிக்கக்கூடும்.

அண்மைக்காலமாக வறட்சியான காலநிலையின் போது காட்டுப்பகுதிகளுக்குத் தீ வைப்பது அதிகரித்துள்ளது. மிருகங்களை வேட்டையாடுவதற்கு இவ்வாறு தீ வைக்கப்படுகின்றது எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறான போதிலும் காட்டுக்குத் தீ வைத்து எமக்கு உரித்தான இயற்கைச் சூழலை அழிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கக்கூடாது. எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சூழல் மீது அக்கறை கொண்டோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை, லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லிந்துலை - வோல்ட்ரீம் பகுதியில் உள்ள வனப்பகுதியிலிரண்டு தீப் பற்றியதால் சுமார் 5 இற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் எரிந்து சாம்பராகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

காற்றின் வேகம் காரணமாக தீ அதிகளவில் பரவியதால் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனினும் ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது என லிந்துலை பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# இருவேறு விபத்து சம்பவங்களில் காயமடைந்த இருவர் மரணம்!

நாவற்குழி, டிசெ.26

நாவற்குழி கேதீவு சங்குப் பிட்டி வீதியில் கடந்த வாரம் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கந்தையா குணராசா (வயது 68) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் காலை 6.40 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மேற்படி நபரை கோயிலாக்கண்டியைச் சேர்ந்த செ.உமாசங்கர் என்ற இளைஞர் (வயது 21) முந்திச் செல்ல முற்பட்ட வேளை சைக்கிளும், மோட்டார் சைக்கிளும் ஒன்றோடொன்று இழுபட்டு விபத்துக்குள்ளாகின. இதில் இருவரும் காயமடைந்தனர்.

குணராசா யாழ். போதனா வைத்தியசாலையிலும், உமாசங்கர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்த விபத்துத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக கடந்த மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நடராஜா கனகலிங்கம் (வயது 75) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஒரு மாத காலமாக இவர் சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22-09)

# பிள்ளைகளைக் கற்பிக்கும் விடயத்தில் பெற்றோர் கவனம் தொடர வேண்டும்

## யாழ். பிரதேச செயலர் கருத்துத் தெரிவிப்பு

சுன்னாகம், டிசெ.26

"புலமைப் பரிசில் பரீட்சையில் பிள்ளைகள் சித்தியடைந்தால் போதும் என்ற போட்டித் தன்மையுடன் பிள்ளைகளைக் கற்பிக்கும் பெற்றோர், பின்னர் அவர்களைக் கவனிக்காது விட்டு விடுகின்றனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

''சிறுவர்கள் பதின்ம வயதை அடையும் போது நீண்ட தேடல் இருக்கும். பெற்றோர்கள் அவர்களை கவனிக்காது விட்டால் பிறழ்வான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய சந்தர்ப்பம் அதிகரிக்கும். பெற்றோர்கள் தொடர்சியாக மாணவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்."

-இவ்வாறு யாழ். பிரதேச செயலர் பொன்னம்பலம் தயாணந்தன் தெரிவித்தார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் புலமைப் பரிசில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு-

புலமைப் பரிசில் பரீட்சையுடன் பிள்ளைகள் மீதான அக்கறை பெற்றோரிடம் இல்லை. புலமைப் பரிசில் பரீட்சையில் பிள்ளைகள் சித்தியடைந்தால் போதும் என்ற போட்டித்தன்மையுடன் பிள்ளைகளைக் கற்பிக்கும் பெற்றோர் பின்னர் அவர்களைக் கவனிக்காது விட்டு விடுகின்றனர். இதுவே பிள்ளைகளை தவறான நடத்தைகளுக்கு இட்டுச் செல்கின்றது.

பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாக்கும் பொறுப்பு பாடசாலைச் சமூகத்தின் கைகளிலேயே தான் உள்ளது. அதனை இவர்கள் சரிவர செய்துள்ளனர். ஆசிரியர்கள் சமூகப் பொறுப்புடன் கடமையாற்றியமையாலேயே மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். பல அர்ப்பணிப்புகள், தியாகங்களை செய்தே மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைகின்றனர். புலமைப் பரிசில் என்பது மாணவர்களின் வாழ்க்கையில் காணப்படும் முதலாவது தடை ஆகும். அதற்காகப் பெற்றோரும் அயராது உழைக்கின்றனர். புலமைப் பரிசில் பரீட்சையை நடத்துவதா, இல்லையா என்று பல விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. அரசு தனக்கு இக்கட்டான நிலைமைகள் வருகின்ற போது பரீட்சையை நிறுத்தப் போவதாகக் கூறும். ஆனால் நடைமுறைப்படுத்தாது.


புலமைப் பரிசில் பரீட்சையில் பாதகமான விடயங்களும் சாதகமான விடயங்களும் உள்ளன. புலமைப் பரிசில் பரீட்சை நிறுத்தப்பட்டால் பாதிக்கப்படுவது பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களே. ஏனெனில், முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்பும் அவர்களுக்குப் புலமைப்பரிசில் ஊடாகக் கிடைக்கும். புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்றோர்கள் காட்டும் அக்கறை தொடர்ச்சியாக நிலவுவதில்லை. இதனாலேயே மாணவர்கள் தவறான நிலைக்குச் செல்கின்றனர். கெட்டிக்காரப் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே அதிக பிரச்சினைகளும் எழுகின்றன. பெற்றோர்கள் அவர்களைக் கவனிக்க வேண்டும்.-" என்றார். (ஐ-54)

# முறைசாரா பிரிவினரின் கண்காட்சியும் பரிசளிப்பும்

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்பட்ட தொழிற்கல்வி பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கச்சாய் அ.த.க.பாடசாலை, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி, உசன் கிராம அ.த.க.பாடசாலை, மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் ஆகியவற்றில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களின் ஆக்கப்பொருள்களே காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக வேள்ட் விசன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட இணைப்பாளர் த.வசந்தநாயகமும் கலந்து கொள்வர். (ஐ)



வடமாகாணத்தின் எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன் போது வடமாகாணத்தில் எழுத்தாளர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இந்தச் சந்திப்பில் தேசிய நூலக சபையின் உயர் அதிகாரிகளான மஹிந்த அரவிந்தா, எம்.எஸ்.எம்.சிகாம், எம்.எம்.சபீக் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-19)

# இவ்வாண்டுக்கான ஏற்றுமதியாளர் விருதைப் பெற்றார் திக்கம்வாசி!

ஏற்றுமதியாளர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா அண்மையில் இலங்கைத் தேசிய வர்த்தக சம்மேளனத்தால் கொழும்பில் ஹில்டன் ஹொட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வெயிலாண்ட் நிறுவனம் 2016 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதியாளர்களுக்கான விருதைப் பெற்றுள்ளது.

இந்த விருதை 'வெயிலாண்ட்' நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான வடமராட்சி திக்கத்தைச் சேர்ந்த கே.ரி.ஐங்கரன் பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடங்களில் இந்நிறுவனம் ஈட்டிய பெரும் முன்னேற்றங்களையும் சாதனைகளையும் அங்கீகரித்தே இச் சிறப்பு விருது அந்த நிறுவனத்துக்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.




வேகமாக விரிவடைந்து வரும் சந்தை வாய்ப்புக்களுக்கு ஈடுகொடுத்து இந் நிறுவனம் மிக உயர்ந்த தரத்தில் உற்பத்திகளை வழங்கி வருவது வெளிப்படையான உண்மையாகும். இலங்கையில் இந்த வகையில் இருபாரிய விவசாயப் பண்ணைகளை இந்த நிறுவனம் சொந்தமாக பேணி வருவதுடன், அவை வட மற்றும் வட மேல் மாகாணங்களில் அமைந்துள்ளன.

ஏற்றுமதி நோக்கில் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புக்களுக்கு ஏற்றதாகக் குறிப்பிட்ட உற்பத்திவகைகளை கிரமமாக குறித்த தவணையில் வழங்கக் கூடிய திறனை இந்நிறுவனம் சகல அம்சங்களிலும் கொண்டிருப்பது இதன் வரப்பிரசாதம் ஆகும்.

'வெயிலாண்ட்' நிறுவனம் ஏற்றுமதிகளில் வருடமொன்றுக்கு மரக்கறி பழவகைகள் 8 இலட்சம் கிலோ ஐரோப்பிய தேசத்தில் பிரதானமாக ஐக்கிய இராச்சியம், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், நோர்வே மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

சகல உற்பத்திகளும் கண்டிப்பாக சுகாதார முறைமைகளைப் பேணி அவற்றின் எதிர்பார்க்கப்படும் தரத்துக்கு (ISO 22000) ஊறு ஏற்படாமல் ஏற்றுமதி செய்து வருகின்றது.

பழ மரக்கறிவகைகள் ஏற்றுமதித்துறையில் இந்நிறுவனத்துக்கு ஈடுபாடு இணையற்ற சர்வதேச தரத்தை நிறுவனம் ஈட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நிறுவனம் சொந்தமாகப் பேணி வரும் விவசாயப் பண்ணைகளில் ஆரோக்கியமான உயர்தர பண்ணை முறைமை அடிப்படையில் உற்பத்திவகைகளை பயிரிட்டு அறுவடை செய்கின்றது.

சர்வதேசச் சந்தையில் இந்நிறுவனம் ஏற்றுமதி செய்து வரும் உற்பத்திகள் சுவையாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதாகவும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய கிழக்கில் புதிய சந்தைவாய்ப்புக்களை ஏற்றுமதி செய்வதை உடனடி இலக்காக இது கொண்டுள்ளது இந்நிறுவனம். (இ)

# தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பில் கைதடி விக்கினேஸ்வரா முதலிடம்

நாவற்குழி, டிசெ.26

பாடசாலைச் சூழலில் டெங்கு பரவும் சூழல் இல்லாதொழிக்கும் வேலைத் திட்டம் மற்றும் சுற்றுப்புறச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகள் மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டி யாழ். மாவட்ட சுகாதாரப் பணிமனையில் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிகளில் இரண்டாம் இடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இப்பாடசாலைகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், சாவகச்சேரி சுகாதார வைத்தியதிகாரி வைத்தியர் எஸ். தயாளனால் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் வலயக்கல்விப் பணிமனை உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் சிரேஷ்ட சுகாதாரப் பரிசோதகர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-22)

# காரைநகர் மலருக்கு உதவக் கோரிக்கை

காரைநகர் சைவ மகா சபையின் நூற்றாண்டு விழா ஜனவரியில் இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு நூற்றாண்டு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், இந்த மலரில் சபைக்குப் பங்களித்தோர் தொடர்பான விவரங்களை வெளியிடவேண்டியுள்ளதால் அவர்கள் இந்த விவரங்களை சேகரித்து வருகின்றனர் என்று சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சபையின் கடந்தகால தலைவர், செயலாளர், பொருளாளர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தொடர்பான விவரங்கள், சபை நடவடிக்கைகள் தொடர்பான ஆவணங்கள், நூல்கள் போன்ற விவரங்களை வைத்திருப்போர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# விசாரிக்கப்படலாம் தமிழக ஆளுநர்

சென்னை, டிசெ.26

தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் ரோசய்யாவிடம் விசாரணை நடத்த மத்திய புலனாய்வுத் துறையினர் தயாராகி வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வருமான வரித்துறை அதிகாரிகள் பணம், நகைகள் மற்றும் பல கோடி ரூபா சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு பதவி விலக்கப்பட்ட ராம மோகனராவை தலைமைச் செயலாளராக நியமிக்கலாம் என்று மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு ரோசய்யாதான் பரிந்துரை செய்தார்.

இதன் அடிப்படையில் விசாரணை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை வருமான வரித் துறையினர் முடுக்கி விட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ரோசய்யாவிடம் எந்த அடிப்படையில் விசாரணை நடத்தப்படும் என்பது குறித்து உறுதியாகத் தெரியவில்லை. இதுதொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மீனவர் பிரச்சினை பேசித் தீர்வு காண்க!

## இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை

இராமேஸ்வரம், டிசெ.26

இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு பேச்சின் ஊடாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

அத்துடன் இலங்கைக் கடற் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 123 படகுகளை விடுவிக்க இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்படும் மீனவர்களிடமிருந்து மீன் பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இந்தநிலையில் கைது செய்யப்படும் மீனவர்கள் நல்லிணக்கத்தின் அடிப்படையில் விடு தலை செய்யப்படுகின்ற போதிலும் மீன்பிடிப் படகுகள் விடுவிக்கப்படாத நிலையிலேயே இராமேஸ்வரம் மீனவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் அடுத்த கட்டப் பேச்சு எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது. இந்தப்பேச்சில் இரு நாட்டு அரசுகளும் விட்டுக்கொடுப்புடன் மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ)

# பாக்.பிரதமரை வாழ்த்தினார் பிரதமர் மோடி

டில்லி, டிசெ.26

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வாழ்த்துச் செய்தி பதிவிட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி -

'பிறந்தநாள் காணும் பாகிஸ்தான் பிரதமரை வாழ்த்துவதுடன் அவர் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழப் பிரார்த்திக்கிறேன்.' என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டொக்டர் எம்.ஜி.ஆரின் 29 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் அ.தி.மு.க. அவைத்தலைவர் மதுசூதனன், தமிழக முதலமைச்சர் பன்னீர் செல்வம், அமைச்சர்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் எனப் பலர் எம்.ஜி.ஆர். சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ள சோனியா

டில்லி, டிசெ.26

16 கட்சிகளை ஒன்று சேர்த்து நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளார் எனக் காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தி அறிவித்துள்ளார். நாணயத் தாள் விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், நாளை செவ்வாய்க்கிழமை இது தொடர்பாக சோனியா காந்தி ஊடகங்களுக்கு அறிவிக்கவுள்ளார்.



500 மற்றும் ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் தடை என்ற அறிவிப்பைத் தொடர்ந்து நாடு முழுவதும் மக்களிடம் பணப் பரிவர்த்தனையில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஆயிரம் கிறிஸ்மஸ் தாத்தாக்களை மணல் சிற்பமாக வடித்துச் சாதனை

ஒரிசா, டிசெ.26

கிறிஸ்மஸ் பண்டிகைக்காக ஒரிசா மாநிலம் பூரி கடற்கரையில் ஆயிரம் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் மணல் சிற்பத்தை முதன் முதலாக வடித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முக்கிய நிகழ்வுக்கும் மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்னாயக் புதுவிதமாக மணல் சிற்பத்தை வடிவமைப்பது வழக்கம்.

அந்த வகையில் கடந்த 4 நாள்களாக, சுதர்சன் பட்னாயக் மற்றும் அவரது குழுவினர் இணைந்து கிறிஸ்மஸ் பண்டிகைக்காக ஆயிரம் கிறிஸ்மஸ் தாத்தாக்களை வடிவமைத்து அசத்தியுள்ளனர்.




மிகப்பிரமாண்டமாகவும், கண்ணைக் கவரும் வகையிலும் மணல் சிற்பம் வடித்துள்ளனர். 2009 ஆம் ஆண்டு 100 மணல் சிற்ப கிறிஸ்மஸ் தாத்தாக்களின் உருவங்களும், 2012 இல் 500 கிறிஸ்மஸ் தாத்தாக்களின் உருவங்களும் வடித்துச் சாதனை செய்யப்பட்டது.

இருப்பினும் இது போன்று ஆயிரம் கிறிஸ்மஸ் தாத்தாக்களின் உருவங்களை மணல் சிற்பமாக வடிப்பது இதுவே முதன் முறை. இதனால் இது உலக சாதனையில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நளினி எழுதிய புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு விரைவில்

சென்னை, டிசெ.26

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி எழுதிய நூலின் ஆங்கிலப் பதிப்பு விரைவில் வெளியிடப் பட உள்ளது என அவரது சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

வேலூர் பெண்கள் சிறையில் நளினியை நேற்று முன்தினம் சனிக் கிழமை சந்தித்துப் பேசிய பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு:

''முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்த மனு மீதான இறுதி விசாரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. நிச்சயம் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

ராஜீவ் காந்தி கொலையும், பிரியங்கா சந்திப்பும் குறித்து நளினி தமிழில் எழுதிய நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த நூலின் ஆங்கிலப் பதிப்பு சென்னை, புதுடில்லி, லண்டன் ஆகிய இடங்களில் விரைவில் வெளியிடப்படவுள்ளது''- என்றார். (எ)

# உதயமானது 'அம்மா தி.மு.க.' புதிய கட்சி!

சென்னை, டிசெ.26

தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவர் இளங்கோவனின் சகோதரர் இனியன் சம்பத். 'அம்மா தி.மு.க.' என்ற பெயரில் புதிய கட்சியை நேற்று முன் தினம் ஆரம்பித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்பகால ஐம்பெரும் தலைவர்களில் ஒருவர் ஈ.வி.கே.சம்பத். இவர் தந்தை பெரியாரின் ஒன்றுவிட்ட சகோதரர். சம்பத்தின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி சுலோச்சனா சம்பத்துக்கு எம்.ஜி.ஆர். ஆரம்பித்த அ.தி.மு.கவில் முக்கிய பொறுப்புகள் வழங்கப்பட்டன. பின்னாளில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான ஜெயலலிதாவும் சுலோச்சனா சம்பத்துக்கு வாரியத் தலைவர் உள்ளிட்ட பதவிகளை வழங்கியிருந்தார்.

சுலோச்சனா சம்பத்தின் மகன்களில் ஒருவரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், காங்கிரஸ் கட்சியில் தீவிரமாகப் பணியாற்றி பின்னாளில் அந்தக் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவராகவும் பதவி உயர்வு பெற்றார். ஜெயலலிதாவுக்கு எதிராகவும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு எதிராகவும் அவ்வப்போது கருத்துக்களை வெளியிட்டு வந்த இளங்கோவனின் தம்பியான ஈ.வி.கே.எஸ். இனியன் சம்பத், கடந்த ஜூன் மாதம் ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு. க.வில் தன்னை இணைத்துக் கொண்டார்.




அவருக்கு மிக முக்கியமான பொறுப்புகள் அளிக்கப்படலாம் என்ற ஊகம் நிலவியது. இந்த நிலையில் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 5 ஆம் திகதி காலமானார். அவரது மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க.வில் முக்கிய பதவி யாருக்கு என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ள நிலையில் ஜெயலலிதாவை மையப்படுத்தி 'அம்மா தி.மு.க.' என்ற புதிய கட்சியைத் தொடங்கி உள்ளார் என இனியன் சம்பத் அறிவித்துள்ளார்.

## கருங்கடலில் விழுந்தது ரஷ்ய ராணுவ விமானம்!

### பயணித்த 92 பேர் பலி?

மொஸ்கோ, டிசெ.26

ரஷ்யாவின் கோச்சி நகரிலிருந்து 92 பேருடன் சிரியாவுக்கு பயணித்த ரஷ்ய இராணுவ விமானம் ஒன்று நேற்று கருங்கடலில்விழுந்து விபத்துக்குள்ளானது என ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் பயணித்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சோச்சி நகரிலிருந்து ரஷ்ய நேரப்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.20. மணிக்கு 92 பேருடன் புறப்பட்ட இந்த விமானம், 20 நிமிடங்களில் ரேடார் (தரைத் தொடர்பு) பார்வையிலிருந்து விலகியுள்ளது. இவ்வாறு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட அந்த விமானம் கருங்கடலில் விழுந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் விமானத்தின் உடைந்த பாகங்கள் தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் டியு-154 ரக விமான வகையைச் சேர்ந்த இந்த விமானத்தில், ரஷ்ய ராணுவத்தினர், புகழ்பெற்ற அலெக்ஸான்ட்ராப் இராணுவ இசைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் இருந்தனர் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் உள்ள லடாகியா மாகாணத்தை நோக்கி இந்த விமானம் சென்று கொண்டிருந்தது என்று கூறப்படுகின்றது. அந்த விமானத்தின் சிதறிக் கிடக்கும் பாகங்களை வைத்து அந்த இடத்தை அடையாளம் கண்ட மீட்புக் குழுவினர், விமானத்தில் சென்றவர்களைத் தேடி மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# ட்ரம்பின் முஸ்லிம் கொள்கையை கட்டுப்படுத்த ஒபாமா நடவடிக்கை

## முஸ்லிம்கள் பற்றிய தரவுகளை அழிக்க ஏற்பாடு



வொஷிங்டன், டிசெ.26

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரொனால்ட் ட்ரம்பின் முஸ்லிம்கள் மீதான கொள்கையை நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதற்காக முஸ்லிம்கள் பற்றிய தரவுகளை அழிப்பதற்கு ஒபாமா தரப்பு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற நியூயோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து தேசிய வருகை பதிவேடு என்ற திட்டத்தை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்தியிருந்தது.

அதன்மூலம் 25 முஸ்லிம் நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்குள் சென்றவர்கள் தொடர்பில் தனியேடு ஒன்று பராமரிக்கப்பட்டு அவர்கள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

அவர்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் குடியேற்ற அதிகாரிகளைச் சந்தித்து தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்ற நடைமுறையும் பின்பற்றப்பட்டது.

எனினும், 2011 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முழுமையாக நீக்கப்பட்ட இந்தத் தேசிய வருகைப் பதிவேட்டுத் திட்டத்தை தீவிரமாக மீண்டும் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ள ட்ரம்ப், அமெரிக்காவில் முஸ்லிம்கள் நுழையத் தடை விதிக்கப்படும் என்றும் முஸ்லிம்களுக்கு தனிப்பதிவேடு பேணப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதனால், அமெரிக்காவின் மதச்சார்பின்மை பாதிக்கப்படும் என்று ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் முஸ்லிம்கள் தொடர்பான பதிவேட்டை முழுமையாக அழித்துவிட ஒபாமா முடிவு செய்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதன்மூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதியாகப் பதவியேற்கும் ட்ரம்ப் முஸ்லிம்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட முடியாது போகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)





இயேசு கிறிஸ்து பிறந்த இடமான இஸ்ரேலில் கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் நேற்று சிறப்பாக இடம்பெற்றன. பெத்லகேம் நகரில் இயேசு பிறந்த இடத்துக்கு அருகில் அமைந்துள்ள மிகப்பழைமையான தேவாலய ஒன்று உள்ளது. அங்கு மின்விளக்கு அலங்காரத்தில் ஜொலித்த இராட்சத கிறிஸ்மஸ் மரத்தின் முன்பாக சிலர் குழுவாக நின்று 'செல்பி' எடுத்து மகிழ்ந்தனர். 'இது கிறிஸ்துவின் நிலம், அமைதியின் பூமி. இங்கு நிற்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்' என்று ஒரு வெளிநாட்டுப் பயணி புல்லரிப்புடன் கூறினார்.

## குழந்தைகளுக்கு ஆதரவளியுங்கள்!

### பாப்பரசர் செய்தி

போர், குடியேற்றம் போன்றவற்றால் வசிக்க இடமின்றித் தவிக்கும் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் கிறிஸ்மஸ் தினச் செய்தியாக உலக மக்களைக் கேட்டுள்ளார். குழந்தைகளிடம் கருணை காட்டும்படியும், இரக்க குணத்துடன் நடந்து கொள்ளும்படியும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வாடிகன் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்ட சிறப்புப் பிரார்த்தனை நடைபெற்றது. இதன் போது பாப்பரசர் பிரான்சிஸ், குழந்தை யேசுவின் உருவப் பொம்மையைத் திறந்து காட்டி பிறப்பை அறிவித்தார். (எ)

# ஐ.நா.சபையில் நிறைவேறியது பலஸ்தீன ஆதரவுத் தீர்மானம்

நியூயோர்க், டிசெ.26

பலஸ்தீன நிலப்பகுதியில் குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேலுக்கு தடை விதிக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேறியுள்ளது.




இஸ்ரேல்-பாலஸ்தீன நாடுகளிடையே நீண்ட வருடங்களாக மோதல் நடைபெற்று வருகின்றது. மேலும் பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் வலுக்கட்டாயமாகக் குடியிருப்புகளை அமைத்து வருவதாக குற்றச்சாட்டு உள்ளது.

கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாறான குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இஸ்ரேல் நடவடிக்கைகள் சட்டப்படி செல்லாது என்றும், இனிமேலும் ஆக்கிரமிப்புகளை அனுமதிக்கக் கூடாது என்றும், இஸ்ரேலின் நடவடிக்கை, சர்வதேச கொள்கைகளுக்கு எதிரானது என்றும் வலியுறுத்தி, எகிப்து ஒரு பிரேரணையை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்திருந்தது.

இந்தப் பிரேரணை மீது நேற்றுமுன்தினம் இரவு வாக்கெடுப்பு நடைபெற்றது. எதிர்ப்பு இன்றி 14:0 என்ற வாக்குகளால் தீர்மானம் வெற்றி பெற்றது. இஸ்ரேலின் நட்பு நாடாக அறியப்பட்டு வரும் அமெரிக்கா இந்தத் தீர்மானத்துக்கு எதிராகத் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்துள்ளது.

பாதுகாப்புச் சபையின் பிற உறுப்பு நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. எனவே ,1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலஸ்தீன நிலப்பரப்பில் இஸ்ரேல் ஏற்படுத்திய குடியிருப்புகள் சட்ட அங்கீகாரத்தை இழக்க உள்ளன. அதே போல் இனிமேல் புதிய குடியிருப்புகளை அமைக்க முடியாது. இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகவுள்ள ட்ரம்ப் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தும், அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் ஒதுங்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஐ.நா.வின் தீர்மானம் வெட்கக்கேடானது

### இஸ்ரேல் பிரதமர் சீற்றம்



ஜெருசலேம், டிசெ.26


பலஸ்தீனப் பகுதியில் இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்புப் பணிகளை நிறுத்தக்கோரும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை இஸ்ரேல் சீற்றத்துடன் நிராகரித்துள்ளது.

வெட்கக்கேடான அந்தத் தீர்மானத்தை இஸ்ரேல் பின்பற்றாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

மேலும், இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள நியூசிலாந்து மற்றும் செனிகலில் உள்ள தன்னுடைய தூதுவர்களை இஸ்ரேல் ஆலோசனைக்காகத் திரும்ப அழைத்துள்ளது.


செனிகலுக்கு வழங்கி வந்த உதவித் திட்டங்களையும் இஸ்ரேல் நிறுத்தியுள்ளது.

இதேவேளை, இந்தத் தீர்மானம் சர்வதேச சட்டத்துக்குக் கிடைத்த வெற்றி என்று பலஸ்தீனப் பேச்சாளர் சாயீப் எரிகட் கருத்துத் தெரிவித்துள்ளார். (எ)




வவுனியா பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் 'இலங்கை வேந்தன் புகழ் கூறுவதில் விஞ்சி நிற்பது இராமாயணமா? திருமுறைகளா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

தமிழருவி த.சிவகுமார் தலைமையில் எஸ்.எஸ்.வாசன் அ.லோகேஸ்வரன், வ.சதீஸ்குமார், கி.விஷாந்தினி ஆகியோர் கருத்துகளை வழங்கினர். இந்த நிகழ்வுக்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினரைப் படங்களில் காணலாம். (இ-10)



மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட, தலை மன்னார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குப் பாடசாலையின் பௌதீக வளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரனால் சுற்றுமதில் அமைப்பதற்கு 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் நிறைவடைந்துள்ளது. அதற்கான காசோலையை யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள அமைச்சரது அலுவலகத்தில் வைத்து பாடசாலையின் பொறுப்பாசிரியரிடம் உத்தியோகபூர்வமாக அமைச்சர் வழங்கினார். (ஐ-81)




யாழ்.மாவட்ட நீரிழிவு நிலையத்தால் யாழ். பிரதேச செயலகத்தில் நீரிழிவு தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

நீரிழிவு நிலையத்தின் தலைவர் தி.மைக்கல், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் இ.சுரேஷ்குமார், மருத்துவர் பொ.ஜெசிதரன், யாழ். மாநகர சபை பொதுச் சுகாதார வைத்தியர் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். ( ஐ-19)







வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் நிதியொதுக்கீட்டில், யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் கல்லூரி அதிபர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (இ-19)




தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கமும், கௌரவ விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக பிரதி மாவட்ட செயலாளர் லயன் வ.ஸ்ரீபிரகாஷும் கலந்து கொண்டனர். நிகழ்வில் 800 இற்கும் மேற்பட்ட தென்மராட்சி கல்வி வலய மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மாணவர்கள் சித்தியடையக் காரணமாக விளங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-21)



யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு மல்லாகம் நீதிவான் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் 60 மாணவர்களுக்கு பாடசாலைப் பைகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. இதன் போது யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் தலைவர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார், செயலாளர் சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா, இணைப்பாளர் சி.சர்மிலா உறுப்பினர்களான சி.ரஜிகலா, எஸ்.ஆனந்தராஜா, பி.ஆர்.ரஞ்சன், எஸ்.சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10)

# பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக்கழகம் திக்கமுனை மைதானத்தில் விலகல் முறையில் நடத்தும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகியது. இப் போட்டித் தொடர் 'அமரர் மாமனி தர் குமார் பொன்னம்பலம்' ஞாபகார்த்த மாபெரும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி என சிறப்பாகப் பெயரிடப்பட் டுள்ளது. கழகத்துக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் இந்தப் போட்டித் தொடரில் மொத்த மாக 41 கழகங்கள் போட்டியிடுகின்றன.

ஆரம்ப நிகழ்வின் போது விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் மெத்தைக்கடைச் சந்தி யிலிருந்து கழக மைதானம் வரை வீரர்கள், நடுவர்கள், யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பொறுப்பாளர் பா.முகுந்தன், மற்றும் ஐக்கிய விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுடன் மேளதாள நாதஸ்வர வாத்தி யங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர். பின்னர் மங்கள விளக்கேற்றல், மௌன அஞ்சலியுடன் போட்டிகள் ஆரம்பமாகின.

கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிய முதலாவது போட்டியில் நவசக்தி விளையாட்டுக் கழக 'பி' அணி, ஸ்ரீஅம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர் கொண்டது. இப் போட்டியின் பிரதான நடுவராக எஸ்.கபில், உதவி நடுவர்களாக




எஸ்.வேணுகீதன் மற்றும் பி. சுதாகர், நான்காவது நடுவராக ம.பிரான்சிஸ் ஆகியோர் செயற்பட்டனர்.

மிக விறுவிறுப்பாக ஆரம் பித்த போட்டியில் நவசக்தி அணியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. முதல்பாதி ஆட்டம் ஆரம்பித்து முதல் நிமிடத்துக்குள் நவசக்தி அணியின் முன்கள 7ஆம் இலக்க வீரர் அ.இ.அமல்ராஸ் தனது அணிக்கான கோலை மிகச் சாதுரியமாக அடித்து அணியை முன்னிலைப் படுத்தினார். இதனால் நிலை தடுமாறிய ஸ்ரீஅம்பாள் அணி நிலையெடுப்பதற்குள் 6ஆவது நிமிடத்தில் நவசக்தி அணியின் இன்னும் ஒரு முன்கள 8ஆம் இலக்க வீரர் இ. யோகராஜன் 2ஆவது கோலையும் போட்டுத் தனது அணியை மேலும் முன்னிலைப்படுத்தினார்.

சிறிது சுதாகரித்துக் கொண்ட ஸ்ரீஅம்பாள் அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர். இதனால் அந்த அணியின் 13ஆம் இலக்க வீரர் கி.கிருஷ்ணதாஸ் 7ஆவது நிமிடத்தில் மிகவும் இலாவகமாக ஒரு கோலை அடித்து அணிக்குச் சற்று ஆறுதலளித்தார்.

இதனால் சீறியெழுந்த நவசக்தி அணியினர் தங்கள் விளையாட்டை வேகப்படுத்தி னர். இதனால் அந்த அணியின் 8ஆம் இலக்க வீரர் இ.யோகராஜன் 14ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு நவசக்தி அணியின் ஆதிக்கத்துடன் மாலை 4.51 மணிக்கு முதல்பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

4.56மணிக்கு ஆரம்பித்த இரண்டாம்பாதி ஆட்டத்தில் நவசக்தி அணியின் ஆதிக்கம் மீண்டும் மேலோங்க முன்கள 7ஆம் இலக்க வீரர் அ.இ.அமல்ராஸ் 22ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக மீண்டும் ஒரு கோலை மிகச் சாதுரியமாக அடித்து அணியை முன்னிலைப்படுத்தி னார். இரு அணி வீரர்களும் தமது அடுத்த கட்டத்துக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத் தமது அணியின் இரு வீரர்களை மாற்றிக் கோல்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பல முயற்சிகளை மேற் கொண்டனர்.





பின்னர் எப்படியாவது கோல்களைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் ஸ்ரீஅம்பாள் அணியினர் வீறுகொண்டு விளையாடினர். இதனால் அந்த அணியின் 13ஆம் இலக்க வீரர் கி.கிருஷ்ணதாஸ் 30ஆவது நிமிடத்தில் மிகவும் நுட்பமாக எதிர் அணியின் பலமான தற்காப்பு வீரர்களை முறியடித்து இலாவகமாக ஒரு கோலை மீண்டும் அடித்து அணிக்கு ஆறுதலளித்தார். அதனைத் தொடர்ந்து நவசக்தி அணியின் முன்கள 7ஆம் இலக்க வீரர் அ.இ. அமல்ராஸ் தனது அணிக்காக 35ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோலை மிகச் சாதுரியமாக அடித்துத் தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

இறுதியாகப் போட்டி மாலை 5.17 மணிக்கு முடிவுக்கு வரும் போது நவசக்தி 'பி' அணி 5 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றுத் தொடரில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஸ்ரீஅம்பாள் 'பி' அணி 2 கோல்களை மட்டும் அடித்ததனால் தோல்வியுற்றுத் தொடரில் தனது இடத்தைத் தக்க வைக்க முடியாமல் விலகிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக நவசக்தி 'பி' அணியின் முன்கள 7ஆம் இலக்க வீரர் அ.இ.அமல்ராஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# தென்னாபிரிக்கா - இலங்கை மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று போர்ட் எலிசபெத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி மூன்று டெஸ்ட், மூன்று ரி20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற் காக தென்னாபிரிக்காவுக்குச் சென்றுள்ளது.

இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத் தில் இன்று தொடங்குகிறது.

சொந்த மண்ணில் விளையாடுவதால் தென்னா பிரிக்கா அணி இந்த டெஸ்ட் தொடரை எளிதில் கைப்பற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது. இலங்கை அணிக்கு இந்த டெஸ்ட் தொடர் சவாலாக இருக்கும். இரு அணிகளும் இதுவரை 22 டெஸ்டில் மோதியுள்ளன.

இதில் தென்னாபிரிக்கா அணி 11 டெஸ்டிலும், இலங்கை அணி 5 டெஸ்டிலும் வெற்றி பெற்றுள்ளன. 6 டெஸ்ட் சமநிலையில் முடிந்தன.

# வங்காளதேசத்துக்கு எதிரான போட்டியில் போல்ட், சவுத்திக்கு ஓய்வு கொடுக்க முடிவு



வங்காளதேச அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் போட்டியில் ட்ரென்ட் போல்ட் மற்றும் சவுத்திக்கு ஓய்வு கொடுக்கப்படலாம் எனத் தெரிகிறது.

வங்காளதேச கிரிக் கெட் அணி தலா மூன்று ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக நியூ ஸிலாந்து சென்றுள்ளது. 'பாக்சிங் டே' அன்று ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறு கிறது. இந்தப் போட்டியில் நியூஸிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் டிம் சவுத்தி மற் றும் ட்ரென்ட் போல்ட் ஆகி யோருக்கு ஓய்வு கொடுக் கப்படலாம் எனக் கூறப்ப டுகிறது.

வங்காளதேச தொடருக்குப் பின் நியூஸிலாந்து அணி தொடர்ந்து டெஸ்ட் போட்டியில் விளையாட இருக்கிறது. குறிப்பாக மார்ச் மாதத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நியூஸிலாந்து அணி விளையாடுகிறது. இத்தொடரில் சிறப்பாக விளை யாடுவதற்காக மேற்படி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப் படலாம் என்று அந்த அணி யின் பயிற்சியாளர் மைக் ஹெசன் கூறியுள்ளார்.

மேலும், இது குறித்து ஹெசன் கூறுகையில் -

இந்த முடிவு ஏற்கனவே உள்ளது போல் மூன்று வகைக் கிரிக்கெட்டிலும் சம அளவு வீரர்களுடன் விளை யாட வேண்டும் என்பதன் அடிப்படையில் எடுத்ததுதான். டெஸ்ட் போட்டித் தொடருக்குத் தயாராகும் வகையில், அவர் களுக்கு வாய்ப்புக் கொடுக்க உள்ளோம். - என்றார்.

போல்ட் இரண்டு தொடர்களிலும், சவுத்தி ரி20 தொடரிலும் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கால்பந்து தரவரிசையில் இந்தியா முன்னேற்றம்

சர்வதேச கால்பந்து சம்மே ளனம் கால்பந்து அணிகளின் புதிய தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் இந்திய அணி இரண்டு இடங்கள் முன்னேறி 135ஆவது இடத்தைப் பிடித்தது. கடந்த 6 ஆண்டுகளில் இந்தியாவின் சிறந்த தரநிலை இதுவாகும்.



ஜனவரி மாதம் 163ஆவது இடத்தை வகித்த இந்திய அணி ஆண்டின் இறுதிக்குள் 28 இடங்கள் முன்னேறி 135 ஆவது இடத்துக்கு வந்துள்ளது.

புதிய தரவரிசைப் பட்டியலில் ஆர்ஜென்டினா முதலிடத்திலும், பிரேசில் 2ஆவது இடத்திலும், உலக சம்பியன் ஜெர்மனி 3ஆவது இடத்திலும், சிலி 4ஆவது இடத்திலும் இருக்கின்றன.

# ஆஸ்திரேலியா – பாகிஸ்தான் 'பாக்சிங் டே' 2ஆவது டெஸ்ட் மெல்போர்னில் இன்று

**2ஆவது டெஸ்ட்**

மிஸ்பா உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. பிரிஸ்பேனில் நடந்த பகல் –இரவு டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இந்தத் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்போர்ன் மைதானத்தில் இன்று தொடங்குகிறது. நத்தார் பண்டிகைக்கு மறுநாள் தொடங்கும் இந்தப் போட்டி 'பாக்சிங் டே' டெஸ்ட் என்று அழைக்கப்படுகிறது.


**அது என்ன பாக்சிங் டே?**


'பாக்சிங் டே' என்றால் ஒருவருக்கொருவர் சண்டையில் இறங்கும் நாள் என்று அர்த்தம் கிடையாது. அந்தப் பெயர் வந்ததற்குச் சில காரணங்கள் உண்டு.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற மேலை நாடுகளில் நத்தார் பண்டிகை அன்று கிறிஸ்தவ தேவாலயங்களின் முன்பு பெரிய பெட்டி ஒன்று வைக்கப்படும். அன்று ஆலயத்துக்கு வருபவர்கள் அந்தப் பெட்டியில் நன்கொடை வழங்குவார்கள். மறுநாள் (டிசெம்பர்26) அந்தப் பெட்டியைப் பிரித்து அதில் உள்ள பணம் மற்றும் பொருள்கள் ஏழை எளியோருக்கு வழங்கப்படும். அந்தப் பெட்டியைத் திறக்கும் நாளை 'பாக்சிங் டே' என்கிறார்கள்.

முன்பு நத்தார் பண்டிகை அன்றும் வேலை செய்ய வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்பட்டதால் கூலித்தொழிலாளர்கள் மறுநாள்தான் தங்களது குடும்பத்தினரைப் பார்க்கச் செல்வார்கள். அப்போது அவர்களது முதலாளிகள் நத்தார் பரிசுப் பெட்டியைப் பரிசாகக் கொடுத்து வழியனுப்பும் நாளின் அடையாளமாகவும் 'பாக்சிங் டே' என்ற பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது.

1950ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவில் 'பாக்சிங் டே' டெஸ்ட் நடந்து வருகிறது. ஆனாலும் 1981இல் இருந்துதான் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் 'பாக்சிங் டே' டெஸ்டை நடத்தும் உரிமையை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பெற்றிருக்கிறது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் 26ஆம் திகதி அன்று ஏதாவது ஒரு அணி புகழ்பெற்ற மெல்போர்ன் மைதானத்தில் ஆஸ்திரேலிய அணியை எதிர்த்து டெஸ்ட் விளையாடும். இந்த முறை அந்த இடத்தை பாகிஸ்தான் அணி பூர்த்தி செய்கிறது.





**மைதானம் எப்படி?**

தொடக்க டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி நிர்ணயித்த 490 ஓட்டங்கள் என்ற இலக்கை பாகிஸ்தான் அணி நெருங்கி வந்து கோட்டை விட்டது. முதல் இன்னிங்ஸில் 142 ஓட்டங்களில் சுருண்ட பாகிஸ்தான் அணி 2ஆவது இன்னிங்ஸில் 450 ஓட்டங்கள் வரை எடுத்து ஆடிய விதம் ஆஸ்திரேலியாவை நடுங்க வைத்து விட்டது. அதனால் 2ஆவது டெஸ்டிலும் பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலிய அணிக்குக் கடும் சோதனை கொடுக்கும் என்று நம்பலாம்.

மெல்போர்னில் 1981ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்த ஆசிய அணியும் வெற்றி பெற்றதில்லை. அந்த நீண்ட நாள் குறையைப் போக்கும் உத்வேகத்துடன் பாகிஸ்தான் அணி தயாராகி வருகிறது. ஆனால் இங்கு நடந்த கடைசி 17 டெஸ்டுகளில் 14இல் வெற்றி பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணியைச் சொந்த மண்ணில் அசைத்துப் பார்ப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

முதலாவது டெஸ்டில் சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் ஆசாத் பிக் கூறுகையில் –

இது மிகப்பெரிய போட்டி. அதுவும் பாக்சிங் டே டெஸ்ட். இந்தப் போட்டியைப் பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். இந்த டெஸ்ட் எவ்வளவு மதிப்பு மிக்கது என்பதை அறிவோம். மிகப்பெரிய ரசிகர்கள் கூட்டத்தின் முன்பு விளையாட இருப்பதால் கொஞ்சம் நெருக்கடி இருக்கத்தான் செய்யும். கிரிக்கெட் வரலாற்றில் இந்த மைதானத்துக்கு என்று தனிச்சிறப்பு உண்டு.

இங்கு விளையாடுவது மிகப்பெரிய கௌரவம். எங்களுக்குச் சாதகமான முடிவு கிடைக்கும் என்று நம்புகிறோம். – என்றார்.

இன்றைய போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் விவரம்:

ஆஸ்திரேலியா: மேட் ரெனா, டேவிட் வார்னர், உஸ்மான் கவாஜா, ஸ்டீவன் ஸ்மித் (கப்டன்), ஹேன்ட்ஸ்கோம்ப், நிக் மேடிசன் அல்லது ஹில்டன் கார்ட்ரைட், மேத்யூ வேட், மிட்செல் ஸ்டார்க், ஹேசில்வுட், நாதன் லயன், ஜாக்சன் பேர்டு.

பாகிஸ்தான்: சமி அஸ்லாம், அசார் அலி, பாபர் அசாம், யூனிஸ்கான், மிஸ்பா உல் ஹக் (கப்டன்), ஆசாத் பிக், சர்ப்ராஸ் அகமது, முகமது அமிர், வஹாப் ரியாஸ், யாசிர் ஷா, ரஹத் அலி.

## ஆஸி. ஓபன் டென்னிஸ் மெடிசன் கீஸ் விலகினார்



அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை மெடிசன் கீஸ் மணிக்கட்டுக் காயம் காரணமாக ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் பங்கேற்கவில்லை என்று அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு வருடமும் நான்கு கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் (ஆஸ்திரேலியா, விம்பிள்டன், பிரெஞ்ச் மற்றும் யு.எஸ்) நடைபெறுவது வழக்கம். இதில் ஆஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் ஓபன் தொடர்தான் முதலில் (ஜனவரி) தொடங்கும்.

அதன்படி அடுத்த வருடத்துக்கான ஆஸ்திரேலிய ஓபன் ஜனவரி 16ஆம் திகதி மெல்போர்ன் பார்க்கில் தொடங்குகிறது. இதற்காக அனைத்து வீராங்கனைகளும் தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வரும் வேளையில், காயம் காரணமாக அமெரிக்காவின் மெடிசன் கீஸ் கலந்து கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

21 வயதான மெடிசன் கீஸ் கடந்த மாதம் நடைபெற்ற உலக சூப்பர் சீரிஸ் டென்னிஸ் தொடரில் கலந்து கொண்டார். இந்தத் தொடர் முடிந்த மூன்று நாள்களுக்குப் பின்னர் தனது இடது கை மணிக்கட்டில் உள்ள காயத்துக்காக அர்த்றொஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். இதனால் இந்தத் தொடரில் பங்கேற்க இயலாது என்று தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் நடைபெற்ற அனைத்து கிராண்ட்ஸ்லாம் தொடர்களிலும் 16 சுற்றுக்குள் மெடிசன் கீஸ் முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அணியில் இளைஞர்கள் ஜொலிப்பு: கோஹ்லி, கும்ப்ளேவிற்கு டிராவிட் புகழாரம்



இந்திய கிரிக்கெட் அணியில் உள்ள இளைஞர்கள் சிறப்பாக விளையாடுகின்றமைக்கு விராட் கோஹ்லி மற்றும் கும்ப்ளே ஆகியோரை ராகுல் டிராவிட் வெகுவாகப் புகழ்ந்து உள்ளார்.

இந்திய இளைஞர் அணிக்கு ராகுல் டிராவிட் பயிற்சியாளராக உள்ளார். 19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணி மற்றும் இந்திய 'ஏ' அணியை டிராவிட் வழி நடத்திச் செல்கிறார். இளைஞர்கள் 'இந்திய ஏ' அணி மற்றும் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடினால் இந்திய அணியில் எளிதாக இடம் கிடைக்கும் என்று அடிக்கடி இளம் வீரர்களிடம் கூறிவருபவர் டிராவிட்.

அதனடிப்படையில் 'இந்திய ஏ' அணியில் சிறப்பாக செயற்பட்ட ஜயந்த் யாதவ் மற்றும் கருண் நாயர் ஆகியோர் இந்திய அணியில் இடம்பிடித்தனர். மும்பை டெஸ்டில் ஜயந்த் யாதவ் சதம் அடித்து சாதனை படைத்தார். சென்னை டெஸ்டில் கருண் நாயர் முச்சதம் அடித்தார்.

அதனால் உள்ளூர் போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கு இந்திய அணியில் நிச்சயம் இடம் உண்டு என்ற சூழ்நிலையை விராட் கோஹ்லி மற்றும் கும்ப்ளே ஆகியோர் உருவாக்கியுள்ளனர் என்று டிராவிட் புகழ்ந்துள்ளார்.

இதுகுறித்து டிராவிட் கூறுகையில்–

உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 'இந்திய ஏ' அணியில் இடம்பிடிப்பது, அதன்பிறகு 'இந்திய ஏ' அணியில் இருந்து இந்திய சர்வதேச அணிக்குத் தேர்வாகும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மிகவும் சிறப்பானதாக உள்ளது.

இந்த அமைப்பு முறையை ஏற்படுத்திய விராட் கோஹ்லி மற்றும் அனில் கும்ப்ளே ஆகியோருக்குத்தான் அனைத்துப் பெருமைகளும் சேரும். ஆகவே நாம் பார்த்துக் கொண்டிருக்கும் முடிவுகளை நமது நடவடிக்கையில் ஒரு பகுதியாகப் பார்க்கச் சந்தோமாக உள்ளது. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பங்கு கொண்டு உரையாற்றிய சமயமே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தை ஈழத் தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தில் ஒரு முக்கியமான நபராக நம் தேசத்தினுடைய வரலாறு பதியும். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது.

உண்மையிலேயே எங்களுடைய தேசத்தின் அரசியல்சரித்திரத்திலே மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பணி வேறு அனைத்து தலைவர்களையும் விட முக்கியம்வாய்ந்ததாகநான் கருதுகிறேன்.

எமது ஆயுதப் போராட்டம் உச்சமடைந்திருந்த காலத்தில், தமிழ்த் தேசிய அரசியலை முற்றுமுழுக்க முறியடிப்பதற்கு எமது தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை – அந்த ஒருமைப்பாட்டை – தகர்த்துத் துண்டாடி, நிரந்தரமாக, எங்கள் மண்ணைப் பறிபோக வைக்கும் விதத்தில் – சிறிலங்கா அரசு இலக்கு வைத்து செயற்பட்ட காலத்தில்தான் அவரது அரசியல் வாழ்க்கை முக்கியத்துவமாக அமைந்தது.

பிரதேசவாதம் எம்மை நலிவுபடுத்தும், அது சிறிலங்கா அரசின்நிகழ்ச்சிநிரலுக்குவழிவகுக்கும் என எமது மக்களுக்கு – தென் தமிழீழத்திலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள மக்களுக்குவிளங்கப்படுத்தி, பிரதேசவாதத்தை வளரவிடக் கூடாது எனஆணித்தரமாகவலியுறுத்தி தனது அரசியல் பயணத்தை அவர் முன்னெடுத்தார்.

அந்த வகையில், எமது உரிமைப் போராட்டம் மற்றத் தலைவர்களை விட அவர் மீது ஆழமான அன்பையும் மதிப்பையும் வைத்திருந்ததோடு உயரிய தான முக்கிய இடத்தையும் அவருக்கு வழங்கி இருந்தது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை நாங்கள் முனைப்பாக முன்னெடுக்க வேண்டும் என்று உழைத்தவர் அவர்.

நாங்கள் எங்கள் அரசியல் கோரிக்கைகளை – குறிப்பாக தமிழர்களது தேசம், இணைந்த வடக்கு – கிழக்குதாயகம், சுயநிர்ணயம் போன்ற விடயங்களை – வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பணிகளை ஆணித்தரமாக முன்னெடுக்க வேண்டியிருந்தது.

சர்வதேச சமூகத்தினால் கொடுக்கப்பட்ட சில அழுத்தங்களுக்கு நசிந்துகொடுத்து, அந்த அரசியல் கோட்பாடுகளை கைவிடுவதற்கு கூட்டமைப்பின் தலைவர்கள் சிந்தித்துக்கொண்டிருந்த போது, மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அந்த விடயத்துக்கு இடமளிக்காமல் உறுதியாகச் செயற்பட்டார். வடக்கு – கிழக்கு என்பதில் உறுதியான விடாப்பிடியோடு அவர் செயற்பட்டார்.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் ஆயுத ரீதியாக பலமாகஇருந்தகாலம்அது. அதனை ஆயுத ரீதியாக பலவீனப்படுத்தினால் கூட தமிழர்களின் தேசிய அரசியலுக்கு அடிப்படையான கோட்பாடுகளை சிதைக்காமல், தமிழர்களின் தேசிய அரசியல் போக்கைமுற்றும்முழுதாகமுறியடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை சிறிலங்கா அரசு நன்றாகத் தெரிந்திருந்தது.

அந்த வகையிலே, ஆயுதப் போராட்டத்தை இன அழிப்பின் ஊடாகமுற்றும்முழுதாக அழித்தாலும், அதற்குப் பின்னர் வரக்கூடிய சூழலில் தமிழர்கள் தங்களின் அரசியல் கோட்பாடுகளைத்தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தடைபோட வேண்டும் என்ற முக்கிய கருத்தின் அடிப்படையிலேயே மாமனிதர்ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை அமைந்தது. இதனை நாம் விளங்கிக் கொள்ள வேண் டும்.

அவரின் முக்கியத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த மாமனிதர் இன்று உயிரோடு இருந்திருந்தால், தற்போதைய அரசாங்கம் போன்ற ஒன்றின்போக்குக்குறித்துநாம் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை இருந்திருக்கும் எனலாம்.

இது மோசமான இனப் படுகொலைகளைப்புரிந்த அரசின் தொடர்ச்சிதான். நல்லாட்சி, நல்லிணக்கம் என்று கூறிக்கொண்டு வடக்கு, கிழக்கு இணைப்பை நிரந்தரமாகப் பிரித்து, தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைக்கக்கூடிய வகையில் இந்த அரசு முழுமூச்சில் செயற்படுகின்றது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் முற்று முழுதாகத் துணை போய்க் கொண்டிருக்கின்றன.

இந்தக்காலகட்டத்தில்ஜோசப் பரராஜசிங்கம் உயிரோடு இருந்திருந்தால் –

அங்கீகரிக்கப்பட்டசுயநிர்ணய உரிமையின்அடிப்படையிலான சமஷ்டித்தீர்வுமட்டுமே ஒரேவழி என்பதையும், வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் விட்டுக்கொடுக்க முடியாத விவகாரம் என்பதையும் அவர் ஆணித்தரமாக வலியுறுத்தி நின்றிருப்பார்.

புத்த சமயத்துக்கு முன்னுரிமையும் மேன்மை நிலையும் கொடுக்கும் நாட்டில் நாங்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழ முடியாது என்ற நியாயத்தை அவரது குரல் மிகக் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் ஒலித்திருக்கும்.

அப்படியான ஒரு நிலைமை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே –

புலிகள் அமைப்பை ஆயுத ரீதியாக இனப்படுகொலை நடத்தி அழித்த பின்னரும் தமிழ்த் தேசத்தின் அரசியலை முன்னெடுப்பதற்கு உறுதியான தலைமைகள் இருக்கக்கூடாது, தங்களுக்கு விலை போகக் கூடிய தலைமைகள் மட்டும் தான் எஞ்சியிருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு – தேவை – தெற்குக்கு இருந்த நிலையில் தான் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

அவருடைய கொலை மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலத்தில் நடந்தபடியால் அது ராஜபக்ஷ தரப்பின் விருப்பில் நடந்த கொலை என்று மட்டுமே நோக்குவது முட்டாள் தனம். அது சிறிலங்கா அரசுக் கட்டமைப்பு விரும்பிய படு கொலை.

மாமனிதர் ரவிராஜுக்கும், மாமனிதர் ஜோசப் பரராஜ சிங்கத்துக்கும் இடையில் வித்தியாசம் இருந்தது.

சிங்கள மக்களுடன் பேசி, ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு எமது பிரச்சினைகளை விளங்கப்படுத்தி, நாங்கள் இந்த விடயத்தைக் கொண்டு போகலாம் என்று ரவிராஜ் நம்பினார்.

ஆனால் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அப்படிப்பட்ட நம்பிக்கை இருக்கவில்லை. நாங்கள் உறுதியாகப் போராடினால் தான் எமது உரிமைகளைப் பெற்றுகொள்ளலாம் என்று அவர் நம்பினார். சிங்கள மக்களுடன் பேசிப் புரிய வைத்து, நியாயப்படுத்தி, நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது. அப்படிச் செய்யலாம்என்றால்எப்போதோ அதைச்செய்திருக்கலாம் என்ற தெளிவு ஜோசப் பரராஜசிங்கத்திடம் இருந்தது.

மாமனிதர் ரவிராஜ் கூட, அவரது முயற்சியில் அவர் தோற்றுப் போக, மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கத்தின்அறிவை–உணர்வை–சிந்தனையை–நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையிலே செயற்படக்கூடிய நிலைமை இருந்தால் அவரையும் அகற்ற வேண்டிய தேவை இருந்தது.

தமிழ்த் தேசிய அரசியல் சம்பந்தமாக சிறிலங்கா அரசின் பார்வையை நாம் சரியாக விளங்கிக்கொண்டால்தான் தமிழ்த் தேசிய அரசியல் தலைமையால் சரியான வழியில் திட்டங்களை வகுத்து உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய முயற்சிகளை எடுக்க முடியும்.

காட்டிக்கொடுப்பதற்கு எங்களுடைய அரசியல் தலைமைகள் இருக்கும் வரை ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் போன்றோர் மாமனிதர்களாக மாறும் நிலைமை தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். இதை எமது மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய அடிப்படை அரசியலை விட்டுக்கொடுக்கக் கூடிய–விலைபோகின்ற–தலைவர்களை இனங்கண்டு, எங்கள் அரசியல் மேடையில் இருந்து அவர்களை நிரந்தரமாக, முற்றும்முழுதாக இடமே இல்லாமல் ஆக்கினால் மட்டுமே எங்களுடைய தேசிய அரசியலை முன்நகர்த்தலாம்.

ஜோசப் பரராஜசிங்கம் எந்தவொரு கொள்கைக்காக நேர்மையாகச் செயற்பட்டாரோ அதற் காக நாம் தொடர்ந்து செயற் படுவதே நாம் அவருக்கு செய் யக்கூடிய சிறந்த அஞ்சலி ஆகும்.

தேர்தலில் வெல்வது, தோற்பது என்பது இரண்டாம் கட்டம். நடப்பது நடக்கட்டும், நாங்கள் உறுதியோடு இந்தப் பாதையை விட்டுவிலமாட்டோம்என்றபற்று உறுதியோடு செயற்படுவோம். அப்படி செயற்படத் தொடங்கினால்தான்சாதகமானவிளைவுகள் கிட்டும்.

காட்டிக்கொடுக்கக் கூடிய தலைவர்களைநாங்கள் இனங்கண்டு, அவர்களைப் புறம் தள்ளி, ஒருநேர்மையான அரசியல் கலாசாரத்தை தொடக்க வேண்டும்.

இன்று, வடக்கு – கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை, தீர்வுஒற்றையாட்சிக்குள், சமஷ்டி கிடையாது, பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுப்பதைநாங்கள் எதிர்க்கவில்லை என்றெல்லாம் துணிந்து கூறக் கூடிய அளவுக்கு கேவலமான தலைமைகளை நாம் கொண்டிருக்கின்றோம்.

இந்த மாமனிதர்களை தங்களுடைய கட்சிக்காரர்கள் என்று சொல்லுவதற்கு இவர்களுக்கு அருகதையில்லை. இவர்கள் வெட்கப்படவேண்டியவர்கள்.

இந்த மாமனிதர்களின் உரிய தியாகங்களை இன்றைக்கு இருக்கக் கூடிய எமது மக்களுக்கு இந்தத் தலைவர்கள் விளங்கப்படுத்தப்போவதில்லை.

மாறாக இந்தத் தியாகங்கள் வீண்போனவை என்றும், அவர்கள் தங்களுடைய உயிர்களை தேவையில்லாம் வீணாக்கியவர்கள் என்ற கோணத்திலும் தான் நம்தலைவர்களுடையநியாயப்படுத்தல்கள் அமையும்.

எங்களுடைய புரட்சி அரசியலை கொச்சைப்படுத்தும் வகையில்தான் இன்றைக்கு இருக்கும் தமிழ் தலைமைகள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த மாமனிதர்கள் இருவருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரான எமக்கும் இடையில் தனிப்பட்ட தொடர்புகள், உறவுகள் இருந்தாலும் அதையும்தாண்டிஎங்களுக்குள் கொள்ளை ரீதியாக ஓர் இணக்கப்பாடு இருக்கின்றது.

அந்தமாமனிதர்களுக்குநமது சரித்திரத்தில் உள்ள முக்கியமான, பிரதான இடத்தையும்பங்களிப்பையும் நமது மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அதனை காலம்காலமாக நினைவு கூர வைத்து, அந்தக்கொள்கையில் தொடரும் பணி எமக்குரியது. – என்றார். (உ -10)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மாவை சேனாதிராசா இவ்வாறு கூறினார். அங்குஅவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

தமிழரசுக்கட்சிமற்றும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எங்கள் அனைவரோடும் வழிகாட்டியாகவும், தலைவனாகவும், போராளியாகவும், நண்பனாகவும் கூடவே இருந்த ஜோசப்பரராஜசிங்கம் நத்தார் பிரார்த்தனை ஒப்புக் கொடுக்கின்ற புனிதமான தினத்திலேயே – நேரத்திலேயே – கொல்லப்பட்டார்.

அவருக்கு அஞ்சலி செலுத்த இதுவே உகந்த நாள். புத்தாண்டு வாழ்த்துக்களையும் இந்த நாளிலே எஞ்சியிருக்கும் நம்மவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

அழிக்கப்பட்ட தினத்திலும் மக்கள் பீனிக்ஸ் பறவைகள் போல எழுந்து நிற்கிறார்கள். என்ன இலட்சியத்துக்காக இலட்சக்கணக்கானஉயிர்கள்பலிகொடுக்கப்பட்டனவோ அந்த ஆத்மாக்களுடைய பலம் எங்களுக்கு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கிறது.

எந்த இலட்சியத்துக்காகப் போராடினார்களோ அதற்காக நாங்கள்மீண்டும்எழுந்துகொண்டிருக்கின்றோம். என்னைப் பொறுத்த வரையில் நானும் 3 முறை இறந்து விட்டேன் என்று தூக்கி வீசப்பட்டவன்தான்.

அண்மையிலே நாரந்தனை வழக்கில் 14 ஆண்டுகளுக்குப் பிறகு குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் இறந்து விட்டோம் என்றுதான் மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள்.

நாலாம் மாடியிலே நான் மூர்ச்சித்து வீழ்ந்த பொழுது மரணித்து விட்டேன் என்று கூறிவிட்டார்கள்.

மூன்றாவதாக ஆனையிறவு இராணுவ முகாமிலும் நான் மரணித்து விட்டேன் என்று தூக்கி வீசப்பட்டேன். இவை சிறிய சம்பவங்கள்தான்.

எங்களுடைய மக்கள் தங்களுடைய உயிர்களைப் பலி கொடுத்து இத்தனை ஆண்டுகளாக இனத்தின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்த சூழலோடு ஒப்பிடுகின்ற பொழுது என்னுடைய உயிர் மீண்டும் தப்பியிருக்கக் கூடியது பெரிய அர்ப்பணம் என்று கூற வரவில்லை.

தமிழர் தாயகத்தின் அழகான மண்ணிலே நாம் ஆக்கிரமிக்கப்பட்டவர்களாக, அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக இருப்பதற்கு எதிராக தந்தை செல்வாவோடு, அமிர்தலிங்கம் அவர்களோடு, தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு தன்னை இளவயதிலிருந்து இணைத்துக் கொண்டு போராட்டங்களிலும் மகாநாடுகளிலும் கலந்து கொண்டு தீர்மானங்கள் எடுப்பதிலெல்லாம் பங்குபற்றி வந்தவர்தான் ஜோசப் பரராஜசிங்கம்.

எங்களோடு உழைத்த பலர் இப்பொழுதுஎம்மிடையேஇல்லை. இலட்சியத்துக்காக, இனத்தின் விடுதலைக்காக, ஜனநாயகத்துக்காக எமது இளைஞர் சமுதாயம் இந்த மண்ணிலே இருந்து வந்திருக்கின்றது.

ஜோசப் பரராஜசிங்கம் மனித உரிமைகளுக்காக இராணுவ, அரச படுகொலைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் கொடுத்தார். பல நாடுகளுக்குச் சென்று பல தூதர்களிடம் குரல் கொடுத்திருக்கின்றார். கட்சியின் ஏகோபித்த தீர்மானத்தில் ஒன்று பட்டுழைத்தவர். கட்சியின் பண்பைக் கட்டிக் காத்தவர்.

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் நம்முடைய இனத்தின் விடுதலைக்காக உழைத்தவர்.

குற்றவாளிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அவரின் வழக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு எடுக்கப்பட்டிருக்கின்றது.

தனித்தனியாக, கூட்டமாக எமதுமக்கள்படுகொலைசெய்யப்பட்ட வழக்குகளில் இலங்கை அரசின் தீர்ப்புக்களின் மீது நாங்கள் திருப்தி கொள்ளவில்லை. அதனால் இன்னமும் நாங்கள் கவலையடைந்திருக்கின்றோம்.

பழைய தீர்ப்புக்கள் இலங்கையின் நீதித்துறையை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றன. இரத்தத்தில் இந்த மக்களின் உணர்வு இன்னமும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றது. – என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சா.வியாழேந்திரன், கே.கோடீஸ்வர மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களானகோ.கருணாகரம், பி.இந்திரகுமார், மா.நடராசா, ஞா.கிருஸ்ண பிள்ளை, த.கலையரசன் உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் யோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஈகச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 2005ஆம் ஆண்டு நத்தார் தினத்தன்று மட்டக்களப்பு புளியந்தீவு தேவாலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்களினால் யோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
(வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

புளியங்குளம் பகுதியில் பேரூந்துக்காகக் காத்திருந்த இவர் திடீரென மயக்கமடைந்து வீழ்ந்தார். அங்கு நின்றவர்கள் இவரை உடனடியாகப் புளியங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படும்வழியில் இவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த இவர் இறுதி யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டிருந்தார். இதன் பின்னர் கதிர் இசைக்குழுவின் அறிவிப்பாளராக செயற்பட்டு வந்தார்.

இவர் அறிவிப்புத் துறையில் சிறந்து விளங்கினார் என்றும் நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். இவரது மரணம் தங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர்கள் கூறினர்.

இவரது இறுதிக்கிரியைகள் குளவிசுட்டானில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று யாழ்ப்பாணம் – நீர்வேலியில் உள்ள இந்து மயானத்தில் உடல்தகனம் செய்யப்படும் எனவும் உறவினர்கள் தெரிவித்தனர். (ம-100)

காலைக்கதிர்
Kalaikkathir

## ரூ.72 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கப்படவுள்ள நிலையில் பல்வேறு காரணங்களைக் கூறி சிரேஷ்ட சத்திர சிகிச்சை நிபுணர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள்.

இதனால் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்திற்குக் கிடைக்கவுள்ள மிகச்சிறந்த வைத்திய கூடம் திரும்பிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இக் கட்டடமானது அதிநவீன பரிசோதனைக் கூடங்கள், மாணவர்களுக்கான கற்பித்தல் பிரிவுகள், நூலகம், பரீட்சைகள் தொகுதி மற்றும் அதிக வசதிகளுடனான சத்திரசிகிச்சைக் கூடம் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

முக்கியமாக, தற்போது மாதக் கணக்காக சத்திர சிகிச்சைக்காகவும் சில முக்கிய பரிசோதனைகளுக்காகவும் காத்திருக்கும் நோயாளர்கள் இதன் பின்னர் சில தினங்களிலேயே சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் வசதிகள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தனியார் வைத்திய சாலைகளில் பல்லாயிரக்கணக்கான ரூபா அறவிடப்பட்டு மேற்கொள்ளப்படும் சிறிய சில வகை சத்திர சிகிச்சைகள் ஒரே நாளில் (Day Surgery) செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தொகுதியிலுள்ள மருத்துவ மாணவர்களின் கற்றலை நோக்காகக்கொண்டு அதிநவீன புற்று நோயைக் கண்டறியும் உபகரணங்கள், கண் மற்றும் காது, மூக்கு, தொண்டை பரிசோதிக்கும் கருவிகள், சிறுவர்களுக்கான நோய்களைக் கண்டறியும் பரிசோதனைக் கருவிகள் மற்றும் இரசாயனவியல் ஆய்வு கூடம் என்பன அமையப்பெறும் என்று அறிய முடிகின்றது.

பொது மருத்துவம், சத்திர சிகிச்சை, பெண்நோயியல் மற்றும் குழந்தை வைத்தியம் என்பவற்றுக்காக ஒவ்வொரு மாடி ஒதுக்கப்படுவதுடன் வெளிநாடுகளில் இருந்து சிறப்பு வைத்தியர்களின் நிபுணத்துவ சேவையும் எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுமாக இருந்தால், தனியார் வைத்திய சாலைகளின் வருமானம் இழக்கப்படும் என்று கருதியே யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட வைத்திய நிபுணர்கள் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இந்த வைத்தியசாலை அமைக்கப்பட வேண்டும் என்பதில் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகமும் மருத்துவபீடமும் உறுதியாக இருப்பதாகத் தெரிய வருகிறது.

இதனால் வைத்தியசாலையை எதிர்க்கும் வைத்திய நிபுணர்கள் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இந்த வைத்தியசாலை அமைப்பதற்கு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடம் முயற்சிகளை மேற்கொள்ளுமாயின், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சிகளை வழங்கமாட்டோம் என்றும் எதிர்ப்பு வைத்தியர் குழாம் துணைவேந்தரை அந்தக் கடிதத்தில் எச்சரித்திருக்கின்றது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு அருகில் - யாழ். மாநகர சபையால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டகாணியில்-வெளிநாடுகளின் நிதி உதவியுடன் உயர் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நவீன வைத்திய சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த வைத்திய சிகிச்சைக் கட்டடம் அமையப்பெறுமாயின் வடக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் தங்கள் பாரிய நோய்களுக்கு ஒரே நாளில் சத்திர சிகிச்சைகளை (Day Care Surgery) செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இந்த வைத்தியசாலைப் பிரிவு அமைந்தால், மக்கள் தனியார் வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்வதற்கு நிகரான நவீன வைத்திய சேவைகளை இங்கு பெற முடியும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள சிரேஷ்ட சத்திர சிகிச்சை நிபுணர்கள் சிலர் இணைந்து இந்த வைத்தியசாலைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றமை யாழ். மக்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற பெரும் வாய்ப்பை இல்லாமல் செய்யும் முயற்சி என்று சில நேர்மையான வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களின் வரிப் பணத்தில் கல்வி கற்று மக்கள் விரோத செயலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி விடயம் தொடர்பில் மருத்துவ மாணவர்கள் சிலரிடம் வினவிய போது அவர்கள் இவ்விடயம் தொடர்பில் தாம் கருத்து எதையும் தெரிவிக்க விரும்பவில்லை என்றனர். காலம் காலமாக சிலர் தங்களின் தனிப்பட்ட நலனுக்காக மருத்துவ மாணவர்களின் கல்வியைப் பகடைக் காய்களாக்கிக் கொள்வதே வழமையாகும் எனவும் அவர்கள் கூறினார்கள்.

இந்த விடயம் தொடர்பாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கப்பிரதிநிதிகள் சிலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, யாழ்ப்பாண மருத்துவர்கள் சிலரால் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தருக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் உறுதிப்படுத்தினர்.

ஆனால், அந்தக் கடிதத்திற்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர்கள் கூறினர். இது ஒரு சிலரின் வற்புறுத்தலினால் இந்தக் கடிதத்தில் சிலர் ஒப்பமிட்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் இந்த சத்திரசிகிச்சைக் கட்டடத் தொகுதி தொடர் பில் பக்கச்சார்பு அற்ற முறை யில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க தாம் ஒரு குழுவை நியமித்து உள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

## ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடராஜா ரவிராஜ் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள்ஐந்துபேரையும் கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றமற்றவர்கள் எனக் கூறி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை விடுதலை செய்திருந்தது.

இந்த நிலையிலேயே தீர்ப்புக் குறித்து திருப்தி அடையப் போவதில்லை எனத் தெரிவித்துள்ள எம்.ஏ.சுமந்திரன், இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய அரசு சந்தேக நபர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தியிருந்தது' எனச் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## சமஷ்டியை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தக் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அமைச்சர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

நாம் இந்த அரசில் இருக்கும் வரை, அதேபோல் உண்மையான பௌத்த மதத்தவனாக இருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் வரை, அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை ஒருபோதும் குறைக்க இடமளிக்கப்பட மாட்டாது. அது மாத்திரமன்றி அதனை நீக்கவும் அனுமதி யோம். அதேபோல் சமஷ்டி அல்லது வேறு எந்த வழியிலாவது நாட்டைப் பிரிக்க நாம் இடமளிக்க மாட்டோம் என்பதையும் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றோம்.

இவை மாத்திரமன்றி வடக்கு -கிழக்கு அல்லது வேறு எந்த மாகாணங்களையும் இணைக்கவும் இடமளிக்கமாட்டோம். எதிர்க்கட்சியில் இருக்கும் அரசியல்வாதிகள் கூறுவது போல் ஒற்றையாட்சி நீக்கப்படவோ சமஷ்டி முறை ஏற்படுத்தப்படவோ மாட்டாது என்பதை மகாநாயக்க தேரர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

எமது நாட்டில் தற்போது தமிழர் ஒருவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார். சிறந்த அரசியல்வாதியான இரா.சம்பந்தன், சுமுகமாகப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு வரலாற்றில் எமக்குக் கிடைத்த சிறந்த அரசியல் தலைவர் ஆவார். சம்பந்தனுடன் நாமும் கலந்துரையாடினோம். அந்தச் சந்தர்ப்பங்களில் இந்த நாடு பௌத்த நாடு என்பதை அவரும் ஏற்றுக் கொண்டார். பௌத்த மதத்துக்கான முன்னுரிமையை நீக்க வேண்டும் என ஒருபோதும் தான் கோரிக்கை விடுக்கப் போவதில்லை என்று அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தாலும் தான் அதனை முன்வைக்கப் போவதில்லை எனத் திட்டவட்டமாக அவர் பல தடவைகள் எம்மிடம் கூறியிருக்கின்றார். அதேபோல் தான் ஒருபோதும் சமஷ்டியையோ அல்லது தனிநாட்டுக் கோரிக்கையையோ முன்வைக் கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். சம்பந்தன் போன்ற மிகவும் மதிக்கப்படும் ஓர் அரசியல்வாதியிடமிருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளியாகும் போதே நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பந்தன் தலைமை வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் இனவாதிகள் பலர் இருக்கின்றனர். சிவாஜிலிங்கம் போன்றோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரை நினைவு கூருகின்றமையுடன் தனிநாட்டுக் கோரிக்கையையும் அடிக்கடி முன்வைக்கின்றனர். எம்மிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் இருப்பது போல் தான் அங்கும் இருக்கின்றனர். பௌத்த விகாரைகளுக்கு ஒருபோதும் செல்லாத சிலர் பௌத்த வெறியர்களைப் போல் நடந்து கொள்ளும் அணியொன்றும் எம் மத்தியில் இருக்கின்றது.

அவர்கள் முகநூல் ஊடாக இஸ்லாமியர்களையும் கத்தோலிக் கர்களையும் திட்டித்தீர்ப் பதுடன் அவர்களைப் பழிவாங்க வருமாறு அழைப்பும் விடுக்கின்றனர். அதேபோல்தான் முஸ்லிம் ஒருவரும் புத்த பெருமானை இழிவுபடுத்திப் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தார். ஆனால் அவரை முஸ்லிம் சமூகம் ஒதுக்கி வைத்துவிட்டது. அதேபோல்தான் தமிழர்கள் மத்தியிலும் சிலர் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் இருக்கின்றார்கள் என்பதற்காக நாடு பிளவுபடப்போவதில்லை. அதனால் நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இதுவே சிறந்த தருணம். –என்றார்.

காலைக்கதிர்
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 222 3000

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் (புத்தகக் கடல்)
மலிவு விற்பனையும்

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைத் துணிகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
வட மாகாணத்தில் hp தரச்சான்று உத்தரவாதம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்
Authorized Genuine Business Partner in Northern Province
நத்தார், புத்தாண்டை முன்னிட்டு
சிறப்புச் சலுகை
விலைக் கழிவு 31.12.2016 வரை தொடர்கிறது.
No. 195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1121 | 077 766 7975
வடபிராந்தியத்தில் மிகச் சிறந்த விலைக் கழிவுடன்
1 முதல் 3 வருடங்கள் வரை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
மதிப்பிற்குரிய நளின் வாடிக்கையாளர்களுக்கு...
தங்களால் எமது நிறுவனத்திடம் திருத்த வேலைகளுக்காக அல்லது உத்தரவாதத்தினை பெற்றுக்கொள்வதற்காக 15-12-2016ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்ட கணனி மற்றும் கணனிசார் பொருட்களை 31-12-2016ம் திகதிக்கு முன்னர் நிறுவனத்திலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.
குறிப்பு :- ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை கீழ்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளவும். மேற்குறிப்பிட்ட திகதியின் பின்னர் குறித்த பொருட்கள் தொடர்பாக நளின் நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது என்பதை மிகத் தாழ்மையுடன் அறியத் தருகின்றோம்.
சேவைமுகாமையாளர்
நளின் கணனி சேவைமையம்.
No. 195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1166
077 766 7974

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.